**ආයතනයේ නම : ජාතික සත්වෝද්‍යාන දෙපාර්තමේන්තුව**

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග 119(4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

**நிறுவனத்தின் பெயர் : தேசிய மிருகக்காட்சி சாலைத் திணைக்களம்**

பாராளுமன்றத்தின் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பில் நிலையியற் கட்டளை 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புகளையும் எடுத்த நடவடிக்கைகளையும் பாரளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.

**Name of the institution : Department National Zoological Garden**

Submission of observations of Hon. Minister and steps taken with regard to the reports tabled by the committee on public Accounts in terms of Standing Order NO.119 (4)

NZG/A/BA/COPA 2025.07.

செயலாளர்,

அரசாங்க கணக்குகள் பற்றிய குழு,

இலங்கை பாராளுமன்றம் ,

சிறீ ஜயவர்தனபுர கோட்டை.

**2019, 2020 மற்றும் 2021 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் தற்போதைய செயல்திறன்**

மேலே கூட்ட அறிக்கையின்படி திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட உத்தரவுகளுக்கு ஏற்ப தற்போதைய நிலைமை கீழே காட்டப்பட்டுள்ளது.

| | விபரம் | குழு வழங்கிய உத்தரவுகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|
| 01 | ரிதியகம சபாரி பூங்கா மற்றும் பின்னவல வாகொல்ல புதிய மிருகக்காட்சிசாலையை தேசிய மிருகக்காட்சி சாலைகள் சட்டத்துக்கு உட்படுத்தி இருக்காமை.<br><br>2016.03.08 திகதி நடைபெற்ற அரச கணக்குகள் பற்றிய குழுக் கூட்டத்தில் ரிதியகம சபாரி பூங்கா மற்றும் பின்னவல வாகொல்ல புதிய | i. ஒரு மாதத்திற்குள் தேசிய மிருகக்காட்சிசாலைகள் சட்டத்தில் உரிய சீர்திருத்தப் பணிகளை நிறைவு செய்து அனுப்புமாறு அரச கணக்குகள் பற்றிய குழுவினால் அறிவிக்கப்பட்டது.<br>குறிப்பிடப்பட்டுள்ள சட்ட வரைபாளர் திணைக்களத்துக்கு கடிதமொன்றை அனுப்புமாறு கூறப்பட்டது. | • எனது இலக்கம் DZG/Dev/2/4Zoo/Act./87 Volu.ii மற்றும் 2023.07.27 திகதிய கடிதத்தின் மூலம் இது தொடர்பான சட்டமாஅதிபர் திணைக்களத்துக்கு அறிவித்துள்ளதோடு,<br>• சட்டத்தை சீர்திருத்தம் செய்யும் பணி தொடர்பான அறிக்கை இணைப்பு 01 மூலம் உங்களுக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.<br>ரிதியகம சபாரி பூங்கா மற்றும் பின்னவல |

| | | | |
|---|---|---|---|
| | மிருகக்காட்சிசாலை, தேசிய மிருகக்காட்சி சாலைகள் சட்டத்துக்கு உட்படுத்தி சட்டத்தைச் சீர்திருத்துமாறு உத்தரவு செய்திருந்தாலும், இதுவரை அவ்வுத்தரவு செயற்படுத்தப்படாமை. இத்தாமதத்தைப் பற்றிய குழு தமது அதிருப்தியைத் தெரிவித்தது. | i. இச்சட்டத்தை சீர்திருத்தும் பணி தொடர்பான அறிக்கையொன்றை 2023.08.05 திகதிக்கு முன்னர் குழுவிடம் சமர்ப்பிக்குமாறு கூறப்பட்டது. | வாகொல்ல புதிய மிருகக்காட்சிசாலையை மிருகக்காட்சிசாலைகள் சட்டத்துக்கு உட்படுத்துவதற்கு அப்போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.<br>• அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றை வரைந்து அமைச்சிடம் அனுப்பப்பட்டுள்ளது. அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றுக்கு உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடலொன்று சுற்றாடல் அமைச்சில் செயலாளருடன் 2025.06.12 திகதி நடாத்தப்பட்டதுடன் மேலும் சட்டத்தின் சீர் திருத்தம் தொடர்பாக அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |
| 02. | 2009-2015 கால எல்லைக்குள் போதுமான ஆய்வுகள் மேற்கொள்ளப்படாமை. | i. கல்வி மற்றும் ஆய்வு உதவியாளர் பதவியின் கீழ் இணைக்கப்பட்ட அதிகாரிகளினால் ஆய்வுகள் பலவற்றைப் பற்றித் தேவையான பின்னணியைத் தயாரிக்கும் பணிகள் நிறைவேற்றப்பட்டது.<br><br>ii.தற்போது அவர்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு உள்வாங்கப்பட்டிருப்பதனா | இப்பதவிக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட அதிகாரிகள் அபிவிருத்தி உதவியாளர் பதவியிலிருந்து அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு உள்வாங்கப்பட்டு வேறு அலுவலகங்களுக்கு இடம்மாறுவதன் காரணமாக ஆய்வுகளை மேற்கொள்ளும் சாத்தியக்கூறு கீழ் மட்டத்தில் இருந்தது. இதன் காரணமாக |

| | | | |
|---|---|---|---|
| | | ல் திணைக்களத்தில் பல்வேறு பிரிவுகளில் சேவையாற்றுகின்றனர் என பி.க.உ./க.உ அறிவித்தார். | திணைக்களத்துக்கேய உரிய பதவியொன்றாக ஆய்வு அதிகாரி பதவியொன்றை உருவாக்கித் தருமாறு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துக்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது. மேலும், முறையாக பிரிவு மட்டத்தில் பதவிகளை நிறுவும் வரை பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் சுயேட்சை அமைப்புக்களுடன் ஒன்றிணைந்து 2023 ஆண்டிற்கான ஆய்வுகள் 17 மற்றும் 2024 ஆண்டிற்கான ஆய்வுகள் 09 மேற்கொள்ளப்பட்டுள்ளன. |
| 03. | அழிவடைந்து செல்லும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ள விலங்குகளை பாதுகாப்பதற்காக ஒழுங்கான வேலைத்திட்டமொன்று செயற்படாமை. | i. அழிவடைந்து செல்லும் அச்சுறுத்தலுக்கு முகம்கொடுத்துள்ளதென இனங்காணப்பட்ட சகல விலங்கினங்களையும் பாதுகாப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும்<br>ii. அவ்விலங்குகளைப் பாதுகாப்பதற்காக சுற்றாடல் அமைச்சு, வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் உட்பட உரிய ஏனைய நிறுவனங்களுடன் | இலங்கையில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள இனங்களின் சிவப்பு பட்டியலில் பட்டியலிடப்பட்டுள்ள அழிவடைந்து செல்லும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ள விலங்குகளை பாதுகாப்பதற்காக எடுக்க முடியுமான பிரதான மற்றும் உத்திகள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது, அவ்விலங்குகளைப் பாதுகாப்பதற்காக |

| | | | |
|---|---|---|---|
| | | ஒருங்கிணைந்து குழுவொன்றை நியமித்து, செயற்பாட்டுத் திட்டமொன்றுடன் முழுமையான அறிக்கையொன்றை 2023.08.05 திகதிக்கு முன்னர் குழுவிடம் சமர்ப்பிக்குமாறு குழு பி.க.உ./க.உ. இற்கு உத்தரவு விடுத்தார். | முன்மொழியப்பட்ட நிறுவனக் கட்டமைப்பொன்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் நிறுவனங்களுக்கிடையிலான ஒன்றிணைந்த நிகழ்ச்சித்திட்டமொன்றைச் செயற்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்ய வேண்டிய நிறுவனங்களைப் பற்றிய தகவல்களை உள்ளடக்கிய அறிக்கையொன்றும் அனுப்பப்பட்டுள்ளது. |
| 04. | “இலங்கை சிறுத்தை செந்தரவுப் புத்தகத்தில் அழிவடைந்து செல்லும் உயர்ந்த அச்சுறுத்தலொன்று உள்ள” (Most endangered) எனும் வகைகளிலிருந்து கீழ் ஆபத்து மட்டமொன்றுக்கு (Endangered) உள்ளடக்கி இருத்தல் குழுவின் அவதானத்துக்கு உட்பட்டமை. | i. செந்தரவுப் புத்தகத்தில் உள்நாட்டுத் தகவல்களை உள்ளடக்குவதில் அடிப்படையாக எடுக்கப்படுவது சுயாதீன பரிசோதகர்கள் மற்றும் வேறு மூலாதாரங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தரவுகள் என்பதனால் இவ்வாறான வகைப்படுத்தல்களுக்காக தேசிய கணக்கெடுப்பொன்றின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட முறையான ஆய்வுத் தரவுகளைப் பயன்படுத்திக்கொள்ளும் முக்கியத்துவத்தை குழு | இலங்கைப் புலி 2007 இல் அறிவிக்கப்பட்ட செந்தரவு பட்டியலின் கீழ் ஆபத்துக்கு உள்ளாகிய (Vulnerable – VU) குழுவிற்கு உரியதாக இருந்ததெனவும், அதன் பின்னர் 2012 ஆண்டில் அறிவிக்கப்பட்ட செந்தரவு பட்டியலில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகிய (Endangered – EN) குழுவுக்குப் பெயரிடப்பட்டுள்ளதெனவும் காட்டப்பட்டுள்ளதோடு, அதன்படி இலங்கைப் புலி அச்சுறுத்தல் மட்டத்தில் உயர் நிமையொன்றுக்கு உள்ளாகியிருப்பதாக |

| | | | |
|---|---|---|---|
| | | சபைக்கு எடுத்துக் காட்டியது. | குறிப்பிடப்பட்டுள்ளதோடு, செந்தரவுப் புத்தகத்தைத் தயாரிப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொள்வது IUCN நிறுவனம் எனவும் குறிப்பிடுகின்றேன். |
| 05. | பின்னவல வாகொல்ல மிருகக்காட்சிசாலை<br><br>இந்த மிருகக்காட்சிசாலை இலங்கைக்கு உரித்தான மற்றும் அழிவடைந்து செல்லும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள விலங்கினங்களைப் பாதுகாப்பதற்காக பாதுகாப்பு நிலையமொன்றாக 2015 ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும், தற்போது அங்கு இருப்பது இலங்கைக்கே உரித்தான பிரதான விலங்கினங்கள் 03 க்கு உரிய விலங்குகள் சுமார் 10 ஆனவை இருத்தல். | i. ஒதுக்கீடு போதுமானதாக இல்லாமை காரணமாக இந்த மிருகக்காட்சிசாலை உலக விலங்குகள் வலயத்தை நிர்மாணிக்கும் பணிகள் தற்போது நிறுத்தப்பட்டுள்ளது.<br>ii. மிருகக்காட்சிசாலைக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரித்துக் கொள்ளும் நோக்குடன் எதிர்காலத்தில் உள்நாட்டு விலங்கு வலயத்துக்கு வெளிநாட்டு விலங்குகளையும் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. | காணிகளை அபகரித்துக் கொள்வதற்கு எதிராக நீண்ட காலமாக இருந்த எதிர்ப்புகள் காரணமாக பின்னவல மிருகக்காட்சிசாலையில் உலக வலயத்துக்கான காணியை (78 ஏக்கர்) கையகப்படுத்துவது 2021 இல் நிறுத்தப்பட்டது. அதன்படி தற்போது மிருகக்காட்சிசாலை இருக்கும் நிலம் உள்நாட்டு வெளிநாட்டு விலங்குகளின் தொகுப்பொன்றை காட்சிக்குட்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. 2025 ஆண்டில் சிங்கங்களுக்கான புகலிடமொன்றை அமைத்தல், உள்நாட்டு வெளிநாட்டு ஊர்வன இனங்களை காட்சிக்குட்படுத்துவதற்காக ஊர்வன தோட்டமொன்றுக்கான நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்வது தற்போது |

| | | | |
|---|---|---|---|
| | | | இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. தற்போது மிருகக்காட்சிசாலையினுள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விலங்கினங்கள் 38 வகை ஆனவை காட்சிக்கு உட்படுத்தப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக பூங்காவில் திறந்த வண்ணத்துப்பூச்சி புகலிடத்தினுள் வண்ணத்துப்பூச்சியினங்கள் சுமார் 35 வகை அறிக்கையிடப்பட்டிருக்கின்றன.<br>அவ்வாறே 2025 ஆண்டில் பின்னவல மிருகக்காட்சிசாலையினால் இலங்கைச் சிறுத்தைகள் செயற்கையாக இனப்பெருக்கம் செய்யப்படுவதோடு கேகாலை பிரதேசத்தில் மாத்திரம் இனங்காண முடியுமான அழிவடைந்து செல்லும கடும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள பந்துல பெதியா மீன்களை மிருகக்காட்சிசாலையினுள் இனப்பெருக்கம் செய்வதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்துவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | | | மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. |
| 06. | மிருகக்காட்சிசாலையில் சீ.சீ.டீ.வீ கெமரா தொகுதியில் கோளாறுகள் காணப்படுதல் மற்றும் கட்டடப் பயன்பாட்டில் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ தொகுதியில் குறைபாடுகள் காணப்பட்டமை. | • சீ.சீ.டீ.வீ கெமரா தொகுதியில் சில கெமராக்களுக்கு மாத்திரம் தேவையான பாகங்கள் இல்லாமை காரணமாக செயலற்று இருந்தாலும் அது செயற்பாட்டு நிலையில் இருந்தது.<br>• மிருகக்காட்சிசாலை நிலத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஹோட்டல் தற்போது டென்டர் நடைமுறையினூடாக வாங்குபவரொருவருக்கு வழங்கி செயற்படுத்தப்படுகிறது<br>• கழிவுநீர் முகாமைத்துவ தொகுதி நடைமுறை ரீதியாகச் செயற்படுத்துவதில் பிரச்சினைகள் உள்ளதென பி.க.உ./ க.உ. அறிவித்தார். | • சீ.சீ.டீ.வீ கெமரா தொகுதி தொடர்பான சேவையை ஒப்பந்தமிட்ட நிறுவனமான SLTS நிறுவனத்தின் மூலம் செயலற்றிருந்த பல கெமராக்கள் பரீட்சீலிக்கப்பட்டதோடு அங்கு இந்நிறுவனத்தின் மூலம் அக்கெமரா, அதன் ஆயுட்காலத்தையும் தாண்டி பயன்படுத்தியுள்ளதெனவும், புனர்நிர்மாணம் செய்வதன்றி புதிய கெமராக்களைப் பொருத்துதல் மிகப் பொருத்தமானதென எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, 2025 ஆண்டில் புதிய கெமராக்களைப் பொருத்துவதற்கான செயற்பாட்டுத் திட்டமொன்று உள்ளடக்கப்பட்டுள்ளதோடு இவ்வாண்டில் அப்பணிகள் நிறைவடையும்.<br>• தற்போது NES (New Elephant Shed) பிரதேசத்தில் யானைக் கொட்டகைகளில் நீர், வடிகட்டல் அலகினூடாக வடிகட்டலுக்கு உட்படுத்தி |

| | | | |
|---|---|---|---|
| | | | விடுவிக்கப்படுகின்றது. CEA (Central Environment Authority) மூலம் நீர் மாதிரியை பரீட்சித்துப் பார்ப்பது இடம்பெறுவதோடு, அதன் BOD (Bio Chemical Oxygen Demand – உயிர் வேதியியல் ஆக்ஸிஜன் தேவை ) பெறுமதி அதிகரிப்பதன் காரணமாக அதனைக் குறைப்பதற்கு வடிகட்டல் அமைப்பு தொகையை ஒருங்கிணைப்புச் செய்ய வேண்டுமென அறிவிக்கப்பட்டது. அது பற்றிப் பரீட்சித்துப் பார்ப்பதற்காக மத்திய பொறியியல் உசாதுணைப் பணியகம் (CECB) நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| 07. | மிருகக்காட்சிசாலையினுள் சுற்றுலாப் பயணிகளின் பயண வசதிக்காகப் பயன்படுத்தப்பட்ட BUGGY வாகனங்கள் செயலற்றுக் காணப்படுகின்றமை. | • 2017 மற்றும் 2018 ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்டு பின்னவல மற்றும் தெஹிவளை மிருகக்காட்சிசாலைகளில் பாவனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட BUGGY வாகனங்கள் 17 பெட்ரிகளின் ஆயுட் காலம் முடிவடைந்தமை காரணமாக செயலற்ற நிலைமையில் உள்ளதெனவும் | Buggy வாகனங்கள் 11 வாகொல்ல மிருகக்காட்சி சாலையில் இருந்ததுடன் அதில் 03 இந்த வருடத் தொடக்கத்தில் ஹம்பாந்தோட்டை சபாரிப் பூங்காவிற்கு வழங்கப்பட்டுள்ளது. மிகுதியாக உள்ள Buggy வாகனங்கள் 08 இல் 06 இயங்கும் நிலையில் இருப்பதுடன் 02 புனர் நிர்மானத்தின் பொருட்டு சேவை உடன்படிக்கை நிறுவனமான RTS நிறுவனத்திடம் மதிப்பீடு |

| | | | |
|---|---|---|---|
| | | • மீண்டும் பெட்ரிகளைப் பயன்படுத்துவதற்கு வாகனமொன்றுக்கு சுமார் ரூ.698,000/- செலவழிக்க வேண்டி ஏற்படும். | பெறுவதற்கு அனுப்பப்பட்டுள்ளது. மற்றும் பின்னவல யானைகள் சரணாலயத்தில் இருக்கும் Buggy வாகனங்கள் 03 இல் 02 தெகிவளை மிருகக்காட்சிசாலைக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் மற்றைய Buggy வாகனம் தற்போதய நடவடிக்கைகளுக்காக பாவிக்கப்படுகிறது. |
| 08. | வெளிநாட்டுப் பறவைகளைக் கொள்வனவு செய்யும் கொள்முதல் செயன்முறை தொடர்பான குறைபாடுகள் காணப்படுகின்றமை. | • நிர்ணயிக்கப்பட்ட டெண்டர் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யத் தவறியமை காரணமாக ஏலங்களைச் சமர்ப்பித்த வழங்குனர்கள் இருவர் நிராகரிக்கப்பட்டமை.<br>• அதனால் எஞ்சிய வழங்குனர்களிடமிருந்து பறவைகளைக் கொள்வளவு செய்தமை. | பறவைகளைக் கொள்வனவு செய்வதனைப் பற்றி தயாரிக்கப்பட்ட அறிக்கை இத்துடன் இணைப்பு 04 மூலம் காட்டப்பட்டுள்ளது. தேசிய மிருகக்காட்சிசாலைக்கு விலங்குகளைக் கொள்வனவு செய்வதில் சரியான மதிப்பீட்டினைத் தயாரிப்பது உட்பட பின்பற்ற வேண்டிய செயன்முறைகள்/வழிகாட்டல்களை உள்ளடக்கி இலக்கம் 03/203 உடைய திணைக்கள உள்ளக சுற்றறிக்கையொன்று பணிப்பாளர் நாயகத்தினால் அவருடைய இலக்கம் NZG/AD/01/Dep.Or.19 vol(1) மற்றும் 2023.08.08 திகதிய கடிதத்தின் மூலம் வெளியிடப்பட்டுள்ளதோடு அச்சுற்றறிக்கையின் பிரகாரம் தற்போதும் விலங்குகளைக் |

| | | | |
|---|---|---|---|
| | | | கொள்வனவு செய்யும் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. |
| 09 | ரிதியகம சபாரி மிருகக்காட்சிசாலை தொடர்பாக உள்ள பிரச்சினைகள் | இந்த சபாரி மிருகக்காட்சிசாலையில் பகுதியளவு ரீதியான நிர்மாணங்கள் தொடர்பான முழுமையான அறிக்கையொன்றை 2023.08.05 திகதிக்கு முன்னர் குழுவிடம் சமர்ப்பித்தல். | சபாரி பூங்காவின் நிர்மாணங்கள் தொடர்பான முழுமையான அறிக்கையொன்று இணைப்பு 05 மூலம் அனுப்பப்பட்டுள்ளது. |
| | 2017 இலிருந்து 2020 ஆண்டு வரையான காலத்தினுள் சுமார் 215 மில்லியன் ரூபா செலவு செய்து நிறைவு செய்யப்பட்டுள்ள நிர்மாணங்கள் இது வரை பயன்பாட்டுக்கு எடுக்கப்படவில்லை எனத் குழுவில் தெளிவாகியமை. | • அந்த நிர்மாணங்களுள் அவுஸ்திரேலியா வலயத்துக்கு எதிர்காலத்தில் பரிமாற்ற நிகழ்ச்சிகளின் கீழ் விலங்குகளைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் அதனைத் திறப்பதற்கு எதிர்பார்க்கப்டுகிறது.<br>• சீடா மற்றும் சிறுத்தை வலயங்களில் இன்னும் நிர்மாணங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது.<br><br>• ரிதியகம சபாரி பூங்காவில் உள்ள விலங்குகளின் பெண் ஆண் தன்மையின் பிரகாரம் எண்ணிக்கை ரீதியாக ஆவணப்படுத்தல் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br>• மிருகக்காட்சிசாலையினுள் உள்ள நட்சத்திர ஆமைகள் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் | i. இக்கருத்திட்டத்தின் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.<br>ii. Cheetah Dens – தேசிய போட்டிகரமான ஏல அழைப்பு முறைமையின் கீழ் பொருத்தமான ஒப்பந்தக்கார ரொருவரை தெரிவு செய்வதற்காக 2025.06.13 திகதி கொள்முதல் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டுள்ளது<br>iii. Exotic Bird Enclosures - 2025 ஆண்டில் மே 31 திகதிக்கு கருத்திட்டத்தின் பௌதிக முன்னேற்றம் 55% ஆகும்.<br>iv. இந்த கருத்திட்டத்தின் பொருட்டு |

| | | | |
|---|---|---|---|
| | | வைத்துக் கொள்ளப்படும் உயிரினங்கள் ஆகும்<br>• மிருகக்காட்சிசாலையின் பாதை அமைப்பின் அபிவிருத்தி நடவடிக்கைகள் 2023 ஆண்டின் செப்டெம்பர் மாதம் ஆகும் போது நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.<br>• விலங்கு வைத்தியர்களின் பணிக்குழுவின் குறைபாடுகளை நிரப்புவதற்காக விவசாய திணைக்களத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | தேவையான வலை (net) கிடைக்கப்பெற்றதன் பின் இக்கருத்திட்டத்தை நிறைவு செய்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.<br>v. Land Cleaning, Fence Construction and Internal Gravel Road Construction in Australian Zone<br>vi. Tree Huts – பொறியியல் பணிகளைப் பற்றிய மத்திய ஆலோசனைப் பணியகத்தினால் அதற்கான வடிவமைப்புக்கள், திட்டங்கள் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.<br>vii. Boundary Fence and Gate in Leopard Zone - தேசிய போட்டிகரமான ஏல அழைப்பு மூலம் பொருத்தமான ஒப்பந்தக்காரரொருவரை தெரிவு செய்வதற்காக பத்திரிகை அறிவித்தலொன்று பிரசுரிக்கப்பட்டதன் பின்னர் அந்த ஏல |

| | | | |
|---|---|---|---|
| | | | ஆவணங்களை மதிப்பிடும் பணிகளை மேற்கொள்வதற்காக பொறியியல் பணிகளைப் பற்றிய மத்திய ஆலோசனைப் பணியகத்திடம் அனுப்பப்பட்டுள்ளது.<br>viii. Phase I Roads and Related Structures தற்போது சுற்றுலாப் பயணிகளுக்காக திறக்கப்பட்டுள்ளது.<br>ix. Village Sales Center தற்போது பயன்பாட்டில் உள்ளது.<br>x. Cafeteria - தற்போது பயன்பாட்டில் உள்ளது.<br>xi. Hard Landscaping – Cheetah zone இக்கருத்திட்டத்தின் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.<br>xii. விலங்கு வைத்தியர்களின் வெற்றிடம் நிரப்பப் பட்டுள்ளது. |
| 10 | தேசிய மிருகக்காட்சிசாலை திணைக்களத்தின் மூலோபாயத் திட்டத்தைத் தயார் செய்தல். | i. தற்போது தயாரித்துக் கொண்டிருக்கின்ற 2024 ஆண்டிலிருந்து 2030 ஆண்டு வரையான தேசிய மிருகக்காட்சிசாலை | 2024 ஆண்டிலிருந்து 2030 ஆண்டு வரையான தேசிய மிருகக்காட்சிசாலை திணைக்களத்தின் மூலோபாயத் திட்டத்தைத் |

| | | | |
|---|---|---|---|
| | 2016 ஆண்டில் நடைபெற்ற அரச கணக்குகள் பற்றிய குழுவில் வழங்கப்பட்ட உத்தரவுகளின் பிரகாரம் 05 ஆண்டுகளுக்கு தேசிய மிருகக்காட்சிசாலை திணைக்களத்தின் செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரிப்பது தொடர்பான முன்னேற்றம் | திணைக்களத்தின் செயற்பாட்டுத் திட்டத்தின் (Action Plan) பணிகளை நிறைவு செய்து, வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் அனுமதியுடன் 2023.12.31 திகதிக்கு முன்னர் குழுவிடம் சமர்ப்பித்தல்.<br>ii.இத்திட்டத்தைத் தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவின் மூலம் அடுத்த 06 மாதங்களுக்குள் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் செயல்முறை மற்றும் உரிய காலஅளவினை உள்ளடக்கிய அறிக்கையொன்றை 2023.08.05 திகதிக்கு முன்னர் குழுவிடம் சமர்ப்பித்தல். | (Strategic plan) தயாரித்து, வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் அனுமதியைப் பெற்றுக் கொண்டு அதன்படி அபிவிருத்தி நடவடிக்கைகள் செயற்படுத்தப்படுகின்றன. |
| 11 | பின்னவல யானைகள் சரணாலயத்தின் குப்பைகள் முகாமைத்துவம் பற்றிய பிரச்சினைகள் | • இக்குப்பைகளின் அளவு அதிகம் என்பதனால் க்ரஷர் இயந்திரமொன்றைப் பயன்படுத்தி குப்பைகளை முகாமை செய்வதற்கு தனியார் நிறுவனமொன்றிற்கு டென்டர் முறைமையினூடாக ஒப்படைக்கப்பட்டதெனினும் அந்நிறுவனத்தினால் இப்பணியை நிறைவேற்றிக் கொள்ள முடியாது என்பது | அரச தொழிற்சாலைகள் திணைக்களத்தின் மூலம் அவ்வியந்திரத்தைத் தயாரித்துக் கொள்வதற்கு அனுப்பி வைக்கப்பட்டதோடு அதனைத் தயாரித்துக் கொள்ள முடியாதுள்ளது என குறிப்பிடப்பட்டது. அதன்படி அவ்வியந்திரத்தின் பாகங்கள் நி.பி.767(02) பிரகாரம் அந்த திணைக்களத்திடம் |

| | | | |
|---|---|---|---|
| | | தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது<br>• அரச தொழிற்சாலைகள் திணைக்களத்தின் மூலம் அவ்வியந்திரத்தைத் தயாரித்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | முறையாக ஒப்படைக்கப்பட்டது. |
| 12 | தேசிய மிருகக்காட்சிசாலை திணைக்களத்தின் பிரதான முன்னுரிமைகளை நிறைவேற்றுவதன் முன்னேற்றத்தைக் கருத்தில் கொள்ளல். | 2024-2030 ஆண்டு வரை தேசிய மிருகக்காட்சிசாலை திணைக்களத்தின் செயல்பாட்டுத் திட்டத்தில், தேசிய மிருகக்காட்சிசாலை சட்டத்தின் பிரகாரம் தேசிய மிருகக்காட்சிசாலை திணைக்களத்தில் பிரதான முன்னுரிமையின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள ஒவ்வொரு பிரிவுகளையும் முன்னேற்றுவதற்காக பொருத்தமானவாறு குழுவினை நியமித்து ஒவ்வொரு நோக்கினையும் செயற்பாட்டு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல். | விலங்கு பரிமாற்ற நிகழ்ச்சித்திட்ட முறைமையின் கீழ் 2023 ஆண்டில் நெதர்லாந்து, தாய்லாந்து, ஸ்லோவாக்கியா, செக் குடியரசிலிருந்து விலங்குகள் கொண்டு வரப்பட்டுள்ளதோடு நெதர்லாந்துக்கும் இந்தியாவுக்கும் விலங்குகள் வழங்கப்பட்டுள்ளன. அவ்வாறே 2024 ஆண்டில் பிரான்ஸ், ஜேர்மனி மற்றும் செக் குடியரசிலிருந்து விலங்குகள் கொண்டுவரப்பட்டுள்ள தோடு ரஷ்யாவுக்கு விலங்குகள் வழங்கப்பட்டுள்ளன. அவ்வாறே 2023 ஆண்டிற்கான ஆய்வுகள்17 மற்றும் 2024 ஆண்டிற்கான ஆய்வுகள் 09 உம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், கல்வி விரிவுரைகள் மற்றும் பிரயோக பட்டறைகள் 21 மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | | | விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் பெருமளவில் இடம்பெற்றுள்ளன. அவ்வாறே விலங்குக் கூடுகளுக்குப் பதிலாக மாதலி புகலிடம், மாக புகலிடம் போன்றே மதம் பிடித்த யானைகளுக்கான புகலிடமும் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. |
| 13 | வருமானம் பற்றிய விரிவான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2023 ஆண்டில் ஆண்டிறுதிக் கணக்குகளைத் தயாரிப்பதில் விவரமான அறிக்கையொன்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். | 2023 ஆண்டிலிருந்து ஆண்டிறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது மிருகக்காட்சிசாலைக்கு வருமானம் கிடைக்கின்ற விதத்தைப் பற்றி பல்லின வருமானங்களும் உட்பட தகவல்கள் அறிக்கையொன்றினை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

வைத்தியர் டம்மிக படவந்தி,

சுற்றாடல் அமைச்சர்.

Dr. Dammika Patabendi
Minister of Environment
Ministry of Environment
"Sobadam Piyasa", No 416/C/1,
Robert Gunawardena Mawatha,
Battaramulla.

## இலங்கையில் அச்சுறுத்தலுக்காளாகியுள்ள சிறப்பினங்களின் சிவப்புப் பட்டியலில் (The National REDD List of 2012 ) அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள அழிந்துவரக்கூடிய அச்சுறுத்தலுக்குள்ளாகும் விலங்குகளைப் பாதுகாத்தல்

இலங்கையில் அச்சுறுத்தலுக்காளாகியுள்ள சிறப்பினங்களின் சிவப்புப் பட்டியலில் (The National REDD List of 2012 ) அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள அழிந்துவரக்கூடிய அச்சுறுத்தலுக்குள்ளாகும் விலங்குகளைப் பாதுகாத்தல் தொடர்பாக பரந்துபட்ட மற்றும் பல்வகை அணுகுமுறைகள் அவசியமாகின்றன. 2021 செப்தெம்பர் மாதத்தில் இறுதியாக மேற்கொள்ளப்பட்ட இற்றைப்படுத்தலுக்கமைய, சிவப்புப் பட்டியலில் வேகமாக அழிந்துவரும் அச்சுறுத்தலுக்காளான இலங்கையின் சில சிறப்பினங்கள் குறித்தொதுக்கப்பட்ட பட்டியலில் மாற்றமடைந்துள்ள போதிலும், பாதுகாப்பு தொடர்பான கோட்பாடுகள் ஏற்புடையனவாகும். அழிந்துவரும் அச்சுறுத்தலுக்காளாகியுள்ள இச் சிறப்பினங்களைப் பாதுகாக்கும் பொருட்டு முன்னெடுக்கப்பட வேண்டிய பிரதான நடவடிக்கைகள் மற்றும் மூலோபாயங்கள் பின்வருமாறு:

1. வாழ்விடங்களைப் பாதுகாத்தல் மற்றும் மறுசீரமைத்தல் (Restoratio) :

இச் சிறப்பினங்கள் தொடர்பாக தீர்மானகரமான வாழ்விடங்களை இனங்காணல் மற்றும் பாதுகாப்பது மிகவும் முக்கியமாகும். பாதுகாப்பு பிரதேசங்கள், தேசிய வனப்பூங்காக்கள் மற்றும் வனசிவராசிகள் ஒதுக்கிடங்களைத் தாபித்து விளைதிறனான வகையில் முகாமைப்படுத்தப்படல் வேண்டும். அழிந்துவரக்கூடிய அச்சுறுத்தலுக்காளாகியுள்ள விலங்குகள் தொடர்பாக உசிதமான சூழலை விஸ்தரிக்கும் பொருட்டு சிதைவடைந்துள்ள வாழ்விடங்கள் மறுசீரமைக்கப்படுதல் வேண்டும். இப் பணி வனசீராசிகள் மற்றும் வன பாதுகாப்பு திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படும்.

2. வனசிவராசிகள் தொடர்பான சட்டத்தை வலுவூட்டுதல் :

இவ்வாறு விலங்குகளுக்கு அச்சுறுத்தலாக விளங்கும் வேட்டையாடல், சட்டவிரோத வணிகம் மற்றும் ஏனைய மனித செயற்பாடுகளைத் தவிர்க்கும் பொருட்டு வனசீவராசிகளைப் பாதுகாக்கும் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை கடுமையாக செயற்படுத்துவது அத்தியாவசியமாகும். குற்றவாளிகளுக்கு வழங்கப்படும் தண்டனை இவ்வாறான குற்றங்களை இழைப்பதற்கு தடையாக அமையும் வகையில் சட்டங்கள் போதுமானதாக இருத்தல் வேண்டும்.

3. சமுதாய பங்களிப்பு மற்றும் கற்கை :

பிரதேசத்திலுள்ள மக்களை இணைத்துக் கொண்டு, வனசீவராசிகளைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் பற்றி விழிப்பூட்டல் மிக முக்கியமானதாகும். பாதுகாப்பு அணுகுமுறைகள் தொடர்பாக மக்களை இணைத்துக் கொள்ளல் மற்றும் அவர்களுக்கு மாற்றீட்டு வாழ்வாதாரங்களை வழங்குவதனூடாக யானை – மனிதன் மோதலைக் குறைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான ஒத்துழைப்புக்களை மேம்படுத்த முடியும்.

4. ஆய்வு மற்றும் கண்காணிப்பு :

இவ்வாறு அழிவடையும் அச்சுறுத்தலுக்காளாகியுள்ள சிறப்பினங்கள் தொடர்பாக விஞ்ஞான ரீதான ஆய்வுகளை நடாத்துவதனூடாக அவைகளது சுற்றாடல்சார் செயற்பாடுகள், நடத்தைக்கோலம் மற்றும் அவை முகங்கொடுக்க நேரிடுகின்ற அச்சுறுத்தல்களை மிகச் சிறப்பாக புரிந்துகொள்வதற்கு ஏதுவாகின்றது. அவைகளது தொகையை படிப்படியாக கண்காணிப்பதனூடாக பாதுகாப்புத்திட்டங்கள் மற்றும் தழுவல் முகாமைத்துவம் தொடர்பாக பெறுமதிமிக்க தரவுகளை வழங்கக் கூடியதாகவிருக்கும்.

5. பங்களிப்பு மற்றும் பங்காண்மை :

அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள் (NGOs), ஆய்வாளர்கள் மற்றும் பிரதேசவாழ் மக்களிடையேயான ஒத்துழைப்புக்கள் அத்தியாவசிமாகும். பங்காண்மையினால் மிகச் சிறந்த பாதுகாப்பு மூலோபாய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு வளங்கள், நிபுணத்துவம் மற்றும் அறிவு என்பன பிரதானமாகும்.

6. வெளிப்பாதுகாப்பு :

சில வேளைகளில், இனப்பெருக்க நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வெளிப் பாதுகாப்பு வசதிகளைத் தாபிப்பதனூடாக அழிவடையாது பாதுகாக்குமுகமான நடவடிக்கைகளை முன்னெடுத்தல் வேண்டும். இந் நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் விலங்குகளது இயற்கையான இனப்பெருக்கம் தொடர்ந்தும் கீழிரங்குமாயின் விலங்குகளை பெருக்குவதற்கு மீண்டும் காட்டுக்குள் அறிமுகப்படுத்த வேண்டியேற்படும். தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தின் பணிப்பொறுப்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவதாகும்.

7. வலுவாதார சுற்றுலா செயற்பாடு :

பொறுப்பு வாய்ந்த மற்றும் வலுவாதார சுற்றுலா பயன்பாடுகளை மேம்படுத்துவதனூடாக உள்நாட்டு பொருளாதாரத்திற்கும் வனசீவராசிகள் பாதுகாப்பு முயற்சிகளும் பல நலன்கள்

கிட்டும். சுற்றுலா வருமானத்தை மீண்டும் பாதுகாப்பு அணுகுமுறைகளுக்காக பயன்படுத்த முடியும்.

8. காலநிலை மாற்றங்களை விழித்தல்:

காலநிலை மாற்றம் பெரும்பாலான சிறப்பினங்களில் தாக்கம் செலுத்தி நிற்கிறது. அழிவடையும் அச்சுறுத்தலுக்காளாகும் இவ்விலங்குகளது நீண்டகால இருப்பு தொடர்பான அச்சுறுத்தலை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் தழுவல் மூலோபாயங்கள் ஊடாக காலநிலை மாற்றங்களுக்கு எதிராக போராட வேண்டியது மிகவும் முக்கியமாகும்.

9. சர்வதேச பங்களிப்பு :

சில சிறப்பினங்கள் இலங்கை தேச எல்லையைத் தாண்டி பறக்கக்கூடிய ஆற்றலைக் கொண்டிருக்க முடியும். ஆதலால், தேச எல்லை பாதகாப்பு அணுகுமுறைகள் தொடர்பாக அயல் நாடுகள் மற்றும் சர்வதேச அமைப்புக்களுடன் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டியது அத்தியாவசியமாகும்.

10. தொடர்ந்தேச்சையான மதிப்பீடு மற்றும் தழுவல் :

புதிய தகவல்கள் மற்றும் மாற்றமுறும் நிலைகளை அடிப்படையாக கொண்டு பாதுகாப்பு பிரயத்தனங்கள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்குட்படுத்தப்படல் வேண்டும். நீண்டகால வெற்றிக்கான பாதுகாப்பு திட்டமிடலின் போது நெகிழ்வுப்போக்கு மிக முக்கியமானதாகும்.

பாதுகாப்பு என்பது பல்வேறு பங்குதாரர்களின் அர்ப்பணிப்பு, வளங்கள் மற்றும் நீண்டகால அர்ப்பணிப்பு அவசியமாகும் சவால்கள் மிகுந்த தொடர்ந்தேச்சையான ஒரு செயற்பாடாகும். அனைத்து சிறப்பினங்களுக்கும் தனித்துவமான சவால்கள் மற்றும தேவைப்பாடுகள் இருக்க முடிவதுடன், அது தொடர்பாக தயாரிக்கப்பட்ட பாதுகாப்பு மூலோபாயங்கள் அவசிமாகின்றன. பாதுகாவலர்கள், கொள்கை வகுப்பாளர்கள், ஆய்வாளர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் இவ்வாறு அழிவடைந்துவரும் விலங்குகளைப் பாதுகாப்பதற்கும் எதிர்கால சந்ததியினருக்காகவும் இலங்கையின் வளமான உயிர் பலவகைமையை பேணிக்காப்பதற்காக இணைந்து செயற்படுதல் வேண்டும்.

அதற்கமைய அழிவடையும் அச்சுறுத்தலுக்காளாகும் விலங்குகளைப் பாதுகாக்கும் பொருட்டு நிறுவனங்களுக்கிடையிலான ஒன்றிணைந்த நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியதுடன், தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்திடமும் அதன் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஒன்றிணைந்த நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் பங்களிப்பு நல்கும் நிறுவனங்கள்

இனங்காணப்பட்டுள்ளதுடன், அது தொடர்பான விபரங்கள் இணைப்பு 02A இல் இணைக்கப்பட்டுள்ளது. நிறுவனங்களுக்கிடையேயான குழு, வனசீவராசிகள் மற்றும் வன வள பாதுகாப்பு அமைச்சின் இணக்கப்பாட்டின் பேரில் சிவப்புத் தரவு நூலினை வடிவமைக்கும் சுற்றாடல் அமைச்சின் தொடர்பாடலுடன் மேற்கொள்வது உசிதமானதெனவும் அக்குழுவின் மூலம் செயலாற்றுகைத் திட்டத்தை தயாரிப்பது உசிதமாதெனவும் முன்மொழிகின்றேன்.

## உத்தேச நிறுவக கட்டமைப்பு

இணைப்பு 02A

**தாவர, விலங்கு மற்றும் சுற்றாடல் முறைமைப் பாதுகாப்பு தொடர்பான தேசிய விஞ்ஞான அமைப்பு**

வனசீராசிகள் மற்றும் வன வள பாதுகாப்பு அமைச்சு

- சுற்றுலா மற்றும் காணி அமைச்சு
- தொழிநுட்ப அமைச்சு
- சுற்றாடல் அமைச்சு

இதன் மூலம் பின்வரும் விடயங்கள் தொடர்பான வசதிகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

உயிர் பல்வகைமையின் தரப் பயன்பாடு பற்றிய ஆய்வுகளை முன்னெடுத்தல, ஆய்வுகளுக்கான சற்றாடல் முறைமை மற்றும் மதிப்பீடுகளினூடாக தீர்மானமெடுக்கும் பொருட்டு வாய்ப்புக்களை வழங்குதல், சிறப்பின விலங்குகளைப் பயன்படுத்தல், இலாபங்கள் மற்றும் நலன்களைப் பங்கீடு செய்தல்

**இலங்கையின் விலங்கியல் ஆய்வகம் (உத்தேச)**

(ஆய்வுக்கான முன்னுரிமை, ஆய்வுகள், கட்டுப்பாட்டுக்குட்படுத்தல், சிவப்புப் பட்டியலிடுவதற்கு துணை புரிதல், விடயங்கள் தொடர்பாக நடாத்தப்படும் பட்டியலிடல்/வணிகமயமாக்கல் மற்றும் நலன்களைப் பகிர்தல், திருத்தம் ஆகியன தொடர்பாக முன்மொழிவுகளைச் சமர்ப்பித்தல், ஒத்துழைப்பு நல்குதல்)

- வனசீவராசிகள் திணைக்களம்
- நூதனசாலைகள் திணைக்களம்
- மிருகக்காட்சிசாலைகள் திணைக்களம்
- தேசிய நீரியல்வள பயன்பாடு மற்றும் அபிவிருத்தி முகவராண்மை (NARA)
- கடற்றொழில் மற்றும் நீரியல்வள திணைக்களம்
- கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களம்
- சமுத்திர சுற்றாடல் பதுகாப்பு அதிகாரசபை

- தேவையான ஆலோசனைகள் தொடர்பாக இலங்கை முதலீட்டுச் சபை (BOI / வணிக சபை /தேசிய திட்டமிடல் திணைக்களம் / தேசிய முயற்சியாண்மை அபிவிருத்தி சபை))

**இலங்கையின் தாவரவியல் ஆய்வகம் (உத்தேச)**

(ஆய்வுக்கான முன்னுரிமை, ஆய்வுகள், கட்டுப்பாட்டுக்குட்படுத்தல், சிவப்புப் பட்டியலிடுவதற்கு துணை புரிதல், விடயங்கள் தொடர்பாக நடாத்தப்படும் பட்டியலிடல்/வணிகமயமாக்கல் மற்றும் நலன்களைப் பகிர்தல், திருத்தம் ஆகியன தொடர்பாக முன்மொழிவுகளைச் சமர்ப்பித்தல், ஒத்துழைப்பு நல்குதல்)

- தாவரியல் பூங்காக்கள் திணைக்களம்
- வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்
- வன பாதுகாப்பு திணைக்களம்
- பண்டாரநாயக்க ஞாபகாரத்த ஆயுர்வேத திணைக்களம்
- தென்னை ஆராய்ச்சி நிறுவகம்
- ஏற்றுமதி விவசாய திணைக்களம்
- இறப்பர் ஆராய்ச்சி நிறுவகம்
- நெல் ஆராய்ச்சி நிறுவகம்
- விவசாயத் திணைக்களம் (தாவர தனிமைப்படுத்தல்)

தேசிய விஞ்ஞான அமைப்பு (NSF)
விஞ்ஞான, தொழிநுட்ப, புத்தாக்கத்திற்கான ஒருங்கிணைப்புச் செயலகம் (COSTI)
அரசாங்க பகுப்பாய்வுத் திணைக்களம்
தேசிய அடிப்படை கற்கை நிறுவகம் (NIFS)
தேசிய ஆராய்ச்சி சபை (NRC)
தேசிய நீர்வாழ் உயிரின ஆராய்ச்சி அதிகாரசபை (NARA)
விவசாய ஆராய்ச்சி கொள்கைகளுக்கான சபை (CARP)
பல்கலைக்கழகங்கள்
தொழிநுட்ப நிறுவகம்(ITI)

இணைப்பு 04

## தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களம் தொடர்பாக வெ ளிநாடு பறவையினங்களை கொள்வனவு செய்தல்

ரிதியகம சபாரி பூங்காவின் நிர்மாணிப்புடன் அங்கு வெளிநாட்டு பறவையின வலயமொன்றை அமைத்தல் மற்றும் தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் தனியாக வசித்து வந்த பறவைகளுக்கு துணைகளை வழங்கும் நோக்குடன் தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்துக்கு வெளிநாட்டு பறவையினங்களை கொள்வனவு செய்வதற்கான பெறுகை நடவடிக்கைகள் 2018 ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு வந்துள்ளது.

மிருகக்காட்சிசாலைக்கு தேவையான வனவலிலங்குகள், விலங்குகளின் பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டங்கள் பொதுவாக தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படும் ஒரு செயற்பாடாக இருந்த போதிலும், இதன் போது விலங்குகளின் பரிமாற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் போதியளவு பறவைகள் திணைக்களத்தின் வசமில்லாததாலும், அருகிவரும் 32 சிறப்பு பறவையினங்களை கொள்வனவு செய்ய வேண்டிய தேவை காணப்பட்டமையனாலும் 2018 ஆண்டில மிருகக்ககாட்சிசாலைகள் மற்றும் நலன்புரி நிதியம் மூலம் அது தொடர்பாக ஏற்பாடுகளை ஒதுக்கிக் கொண்டு இப் பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மதிப்பீடுகளை தயாரித்தல் மற்றும் குறித்த கேள்விமனுக்களை தயாரித்தல் தொடர்பாக ஐந்து அங்கத்தவர்களைக் கொண்ட தொழிநுட்ப குழுவொன்று 2018.01.02 ஆந் திகதிய கடிதம் மூலம் நியமிக்கப்பட்டுள்ளது.

அத் தொழிநுட்ப குழு அங்கத்தவர்களினால் அப்போது அவர்களினால் பெற்றுக் கூடியதாகவிருந்த தகவல்களை அடிப்படையாக கொண்டு மிகவும் சரியான மதிப்பீடு மற்றும் கேள்வி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டன. அதன் போது கொள்வனவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்ட பறவையினங்கள் வெளிநாடுகளிலும் அருகிவருகின்றனவாக காணப்பட்டமையனால் மிகச் சரியாக அப்பறவையினங்களின் விற்பனை விலையை அடிப்படையாக கொண்டு தொழிநுட்ப மதிப்பீட்டுக்கு குழுவுக்கு தகுவிதிகளை ஆராய்வதற்கு முடியாதிருந்தது. எனினும் அது தொடர்பான பொதுவான செயன்முறையொன்றாக வெளிநாட்டு பறகைகளை விற்பனை செய்கின்ற

வலைதளங்களில் பிரசுரிக்கப்படுகின்ற விலைமனுக்களை அடிப்படையாக கொண்டு மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கு தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. உதாரணமாக, ஐக்கிய அமெரிக்கா இராச்சியத்திலுள்ள மிருகக்காட்சிசாலை ஒன்றுக்கு இலங்கையின் விட்டில் பூச்சியொன்றை கொள்வனவு செய்வதற்கான தேவை நிலவிய போது இலங்கையின் விட்டில் பூச்சியின் பெறுமதியைக் கணக்கிடும் போது தொழிநுட்பக் குழுவுக்கு பெரும் சிக்கலுக்கு முகங்கொடுக்க நேரிட்டது.

அவ்வாறே அப் பறவைகள் வீடுகளில் செல்லப்பிராணிகளாக வளர்க்கப்படாமையினால், பறவைகளை விற்பனை செய்யும் வலைதளங்கள் மூலம் அன்றாடம் விலைத்தளம்பல்கள் இற்றைவரைப்படுத்தப்படாமையின் காரணமாக அவ்வாறான சந்தர்ப்பங்களில் வெளிநாட்டிலிருந்து பறவைகளை விற்பனை செய்யும் வலைத்தளங்கள் ஊடாக ஆராய்ந்து திணைக்களத்துக்கு கொள்வனவு செய்ய கருதுகின்ற பறவைகளது நியாயமான விலையை அடிப்படையாக கொண்டு மதப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் பெறுகை உருவகங்களின் வாயிலாக மிகச் சரியான பெறுகைத்திட்டத்தை தெரிவு செய்துகொள்வதற்கு முதலில் பொருட்களினதும் வேவைகளினதும் தன்மை பற்றி அவதானம் செலுத்தியுள்ள தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் உயிருள்ள விலங்குகளை கொள்வனவு செய்தல் எனும் விடயம் தொடர்பாக அவதானம் செலுத்தப்பட்டு தேசிய போட்டி போட்டிரீதியான அடிப்படையில் கேள்வி கோருவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனினும் உயிருள்ள விலங்குகளை கொள்வனவு செய்யும் போது சர்வதேச கொடுக்கல்வாங்கள் ரீதியாக பாரிய அவதானத்தை ஏற்பதானது அரசுக்கும் நிறுவனத்திற்கும் சில போது துரதிஷ்டவசமாகவும் அமையக்கூடும். ஏதேனமொரு காரணத்தினால் சர்வதேச கேள்வி கோரல் மூலம் இறக்குமதி செய்யப்பட்டு பறவைகள் ஏதேனும் இயற்கை அனர்த்தம் அல்லது தொற்றுநோய்க்காளாகி இலங்கைக்கு கொண்டுவரப்பட்டிருப்பின் அல்லது திணைக்கத்தின் தேவைக்கேற்றவாறு வகை, தனித்துவமான வர்ணமல்லாத பறவைகள் வழங்கப்படும் போது, அவ்விலங்குகளை மாற்றிக் கொள்ள நேரிடும் போது சர்வதேச நிறுவனங்களுடனான கொடுக்கல் வாங்கல்களின் போது பலவிதமான அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்க நேரிடுதல், வெளிநாட்டு வணிகர்களின் நெருக்கமின்மை, தொடர்பாடலின்மை ஆகியன காரணமாக அவர்கள் பற்றிய நம்பகரத்தன்மையை ஏற்படுத்திக் கொள்வதிலுள்ள சிரமம், சர்வதேச ரீதியான கேள்விமனுக் கோரலின் போது பல்வேறு நாடுகளில் தூதரங்கள் ஊடாக

அதனை மேற்கொள்ள வேண்டியுள்ளமையினால் செயற்பாடு சிக்கலாகவும், அதிக கிரயம் மற்றும் இது தொடர்பாக ஒதுக்கப்படும் ஏற்பாடுகள் வரையறுக்கப்படல் ஆகியன காரணமாக தேசிய போட்டி அடிப்படையிலான கேள்விமனுக்கோரும் பெறுகைத் திட்டத்தை தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு தேர்ந்தெடுத்துள்ளது.

அவ்வாறே பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.6.1. (அ))(ii) பிரிவின் பிரகாரம் போட்டி அடிப்படையை ஊக்குவித்து தேசிய பத்திரிகைகளில் விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு போட்டிநிலையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அவ்வாறே தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் தயாரிக்கப்பட்ட கேள்வி ஆவணங்கள் மற்றும் மதிப்பீடானது திணைக்கள பெறுகைக் குழுவின் மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளமையினால் தொடர் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் போது கேள்விதாரர்கள் மூன்றுபேர் கேள்விகளை சமர்ப்பித்திருந்த போதிலும் அதில் இரு கேள்விதாரர்களினால் கேள்வமனுக்களில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் மீறப்பட்டு விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அவ் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

Bird research center and resort (Pvt) Ltd

இந் நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட விலைமனுக்களுடன் பெறுகையின் போது திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட நிபந்தனையான, “பறவைகள் ஒப்படைக்கப்பட்டு ஒரு மாத கால தடுப்புக் காலத்தின் பின்னர் மாத்திரம் கொடுப்பனவு செலுத்தப்படும்” எனும் நிபந்தனைக்கு எதிராக “பறவைகள் நிறுவனத்திக்கு வழங்கப்பட்ட உடனேயே கொடுப்பனவுகள் வழங்கப்படுதல் வேண்டும்” என அனைத்து கேள்வி ஆவணங்களிலும் பொறிக்கப்பட்டிருந்தது.

அதற்கமைய ஒரு மாத காலத்தினுள் அப் பறவைகளை வைத்துக்கொள்ளுவது தொடர்பில் அந் நிறுவனத்தினால் நம்பிக்கை தெரிவிக்காத ஒரு நிலைமையின் கீழ் அந் நிறுவனத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட விலைமனுக்கள் அனைத்தையும் நிராகரிக்க வேண்டியேற்பட்டது.

Hidellana Tea Factory

இந் நிறுவனத்தின் மூலம் நான்கு உருப்படிகளுக்கான விலைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அதில் ஒரு உருப்படியின் விலை, கேள்விமனுவைச் சமர்ப்பித்திருந்த நிறுவனத்தை (07) (Mandarin Duck) ஐ விட அதிகமாக இருந்ததுடன் ஏனைய 3 உருப்படிகள் தொடர்பாகவும் ஒவ்வொரு உருப்படி தொடர்பாகவும் கோரப்பட்டிருந்த பறகைளின் அளவை விட குறைவாக சமர்ப்பிக்கப்பட்டிருந்தமையினால் அவ்விலைமனுவும் நிராகரிக்கப்பட்டது. இதன் போது திணைக்களத்தினால் கொள்வனவு செய்வதற்கு உத்தேசித்துள்ள பறவைகளின் அளவை விட குறைவான அளவுக்கு கேள்விதாரரின் விலையும் குறைந்திருந்தமையினாலும் கொள்வனவு செய்வது நடைமுறைச் சாத்தியமாகாத காரணத்தினாலும் அது கேள்விமனு நிபந்தனைக்கு முரணாக இருந்தமையினாலும் அக்கேள்விதாரரும் நிராகரிக்கப்பட்டார்.

அதற்கமைய இத் தகல்களுக்கமைய திணைக்களத்தின் தேவைப்பாட்டிற்கு மிகவும் சரியானவாறு பதிலளிக்கப்பட்ட தனியார் கம்பனியின் மூலம் பறவைகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

இணைப்பு 05

| செயற்திட்டம் | ஒப்பந்த காரரின் பெயர் | பெறுமதி | 2023/07/31 திகதியிலான செலவு | வேலை ஆரம்பிக் கப்பட்ட திகதி | வேலை முடிவுறுத்த ப்பட வேண்டிய திகதி | நாட்களின் நீடிப்பு | ஒப்பந்தம் கைவிடப்பட்டிருப்பின் அதற்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|---|
| Gravel Road in Elephant Zone | தேசிய பொறிதொகுதி நிறுவனம் | 70,602,875.80 | 33,258,155.04 | 2016/12/14 | 2017/03/16 | | முன்னேற்றம் மந்தமாக காணப்பட்மையினால் Terminate செய்யப்பட்டுள்ளது. செய்யப்பட்ட வேலைகளின் அளவிற்கேற்ப குறித்த இறுதி பட்டியல்களை சமர்ப்பிக்கும்படி NEMO நிறுவனத்துக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்குப் பதிலளிக்காமையின் காரணத்தினால் 2023/04/24 ஆந் திகதி இறுதி அறிவித்தல் கடிதமும் வெளியிடப்பட்டதுடன அது தொடர்பாகவும் NEMO நிறுவனம் பதிலளிக்காமையினால் CECB நிறுவனத்துடனான இறுதி பட்டியல்கள் தயாரிக்கப்படுகின்றன. எஞ்சிய பணிகளுக்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அப்பணிகளை பூர்த்தி செய்வது தொடர்பாக 2024 செயலாற்றுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. |
| Service Road in Small Animal Kingdom | தேசிய பொறிதொகுதி நிறுவனம் | 24,323,915.81 | 5,558,729.41 | 2017/09/13 | 2018/01/11 | 2018/03/26 | முன்னேற்றம் மந்தமாக காணப்பட்மையினால் Terminate செய்யப்பட்டுள்ளது. செய்யப்பட்ட வேலைகளின் அளவிற்கேற்ப குறித்த இறுதி பட்டியல்களை சமர்ப்பிக்கும்படி NEMO நிறுவனத்துக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்குப் பதிலளிக்காமையின் காரணத்தினால் 2023/04/24 ஆந் திகதி இறுதி அறிவித்தல் கடிதமும் வெளியிடப்பட்டதுடன் அது தொடர்பாகவும் NEMO நிறுவனம் பதிலளிக்காமையினால் CECB |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | நிறுவனத்துடனான இறுதி பட்டியல்கள் தயாரிக்கப்படுகின்றன. எஞ்சிய பணிகளுக்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அப்பணிகளை பூர்த்தி செய்வது தொடர்பாக 2024 செயலாற்றுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. |
| Gravel Road in Elephant Zone | தேசிய பொறித்தொகுதி நிறுவனம் | 12,614,878.30 | 1,599,166.96 | 2017/11/24 | 2018/03/24 | | முன்னேற்றம் மந்தமாக காணப்பட்டமையினால் Terminate செய்யப்பட்டுள்ளது. செய்யப்பட்ட வேலைகளின் அளவிற்கேற்ப குறித்த இறுதி பட்டியல்களை சமர்ப்பிக்குமபடி NEMO நிறுவனத்துக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்குப் பதிலளிக்காமையின் காரணத்தினால் 2023/04/24 ஆந் திகதி இறுதி அறிவித்தல் கடிதமும் வெளியிடப்பட்டதுடன் அது தொடர்பாகவும் NEMO நிறுவனம் பதிலளிக்காமையினால் CECB நிறுவனத்துடனான இறுதி பட்டியல்கள் தயாரிக்கப்படுகின்றன. எஞ்சிய பணிகளுக்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அப்பணிகளை பூர்த்தி செய்வது தொடர்பாக 2024 செயலாற்றுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. |
| Lion Den No- III | தேசிய பொறிதொகுதி நிறுவனம் | 10,706,866.87 | 3,559,730.25 | 2017/03/01 | 2017/07/29 | | முன்னேற்றம் மந்தமாக காணப்பட்டமையினால் Terminate செய்யப்பட்டுள்ளது. செய்யப்பட்ட வேலைகளின் அளவிற்கேற்ப குறித்த இறுதி பட்டியல்களை சமர்ப்பிக்குமபடி NEMO நிறுவனத்துக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்குப் பதிலளிக்காமையின் காரணத்தினால் 2023/04/24 ஆந் திகதி இறுதி அறிவித்தல் கடிதமும் வெளியிடப்பட்டதுடன் அது தொடர்பாகவும் NEMO நிறுவனம் பதிலளிக்காமையினால் CECB நிறுவனத்துடனான இறுதி பட்டியல்கள் தயாரிக்கப்படுகின்றன. எஞ்சிய பணிகளுக்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அப்பணிகளை பூர்த்தி செய்வது தொடர்பாக 2024 செயலாற்றுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| Gravel Road in Elephant Zone | தேசிய பொறித்தொகுதி நிறுவனம் | 11,257,890.00 | 6,062,214.93 | 2017/05/12 | 2017/09/09 | | முன்னேற்றம் மந்தமாக காணப்பட்டமையினால் Terminate செய்யப்பட்டுள்ளது. செய்யப்பட்ட வேலைகளின் அளவிற்கேற்ப குறித்த இறுதி பட்டியல்களை சமர்ப்பிக்கும்படி NEMO நிறுவனத்துக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்குப் பதிலளிக்காமையின் காரணத்தினால் 2023/04/24 ஆந் திகதி இறுதி அறிவித்தல் கடிதமும் வெளியிடப்பட்டதுடன் அது தொடர்பாகவும் NEMO நிறுவனம் பதிலளிக்காமையினால் CECB நிறுவனத்துடனான இறுதி பட்டியல்கள் தயாரிக்கப்படுகின்றன. எஞ்சிய பணிகளுக்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அப்பணிகளை பூர்த்தி செய்வது தொடர்பாக 2024 செயலாற்றுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. |
| 16 Feet Chain Link Fence between Asian Elephant Zone Stage-II Area & Leopard Zone | தேசிய பொறிதொகுதி நிறுவனம் | 43,588,320.62 | 23,080,006.12 | 2017/09/13 | 2018/03/12 | | முன்னேற்றம் மந்தமாக காணப்பட்டமையினால் Terminate செய்யப்பட்டுள்ளது. வேலையின் அளவுக்கேற்ப திணைக்களத்தின் மூலம் மூலப்பொருட்கள் வழங்கப்பட்டு சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் அலுவலர்களின் ஊழிய பங்களிப்பு பெறப்பட்டது. அரச செலவுக் கட்டுப்பாடு தொடர்பாக வெளியிடப்பட்ட 2022/04/26 ஆந் திகதிய தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை இல. 03/2022 இற்கமைய ஒப்பந்தம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. எஞ்சிய பணிகளுக்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அப்பணிகளை பூர்த்தி செய்வது தொடர்பாக 2024 செயலாற்றுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. |
| Gravel Road in. Elephant Zone | தேசிய பொறித்தொகுதி நிறுவனம் | 72,496,765.00 | 38,893,304.48 | 2019/10/08 | 2020/05/05 | 2021/06/25 | COVID-19 பெருந்தொற்று நிலையுடன் வெளியிடப்பட்ட 2020/04/16 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் இறக்குமதி தடை செய்யப்பட்டமையின் காரணமாக வலை மற்றும் உபரகரணங்கள் சீனாவிலிருந்து இறக்குமதி செய்வது சிக்கலாகவிருந்தது. அதன் பின்னர் டொலரின் பெறுமதி இறக்கம் மற்றும் நாட்டில் டொலர் பற்றாக்குறை காரணமாக மூலப்பொருட்களின் விலை அதிகரித்தமை காரணமாக ஒப்பந்தகாரரினால் Stainless Steel வலை மற்றும் உபகரணங்கள் தொடர்பாக விலை முரண்பாடு |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | கோரல். அரச செலவுக் கட்டுப்பாடு தொடர்பாக வெளியிடப்பட்ட 2020/04/16 ஆந் திகதிய தேசிய வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கை இல. 03/2022 இற்கமைய இவ் ஒப்பந்தம் 2022/08/31 ஆந் திகதிய Mutual Terminate செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய பணிகளுக்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அப்பணிகளை பூர்த்தி செய்வது தொடர்பாக 2024 செயலாற்றுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. |
| Cheetah-Dens & Pens | சுமனசேகர கன்ஸ்ட்ரக்ஷன் தனியார் கம்பனி | 21,072,385.30 | 5,582,153.23 | 2019/03/25 | 2019/07/23 | 2019/08/30 | முன்னேற்றம் மந்தமாக காணப்பட்டமை மற்றும் ஒப்பந்தகாரரினால் 2020/03/31 ஆந் திகதிக்குப் பின்னர் செயலாற்றுகை உத்தரவாதங்கள் நீடிக்கப் படாமையினால் இவ் ஒப்பந்தம் 2021/04/08 ஆந் திகதி Terminate செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய பணிகளுக்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அப்பணிகளை பூர்த்தி செய்வது தொடர்பாக 2024 செயலாற்றுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. |
| Boundary Fence & Gates in Leopard Zone | ரன்வெளி கன்ஸ்ட்ரக்ஷன் | 59,013,022.88 | 18,843,313.98 | 2019/09/04 | 2020/03/02 | 2020/08/18 | முன்னேற்றம் மந்தமாக காணப்பட்டமையினால் இவ் ஒப்பந்தம் 2021/10/11 ஆந் திகதி Terminate செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய பணிகளுக்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அப்பணிகளை பூர்த்தி செய்வது தொடர்பாக 2024 செயலாற்றுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. |

இணைப்பு 06

**தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தின் செயலாற்றுகைத் திட்டத்தை தயாரித்தல்.**
**எதிர்வரும் 06 மாதங்களுக்கான வேலைத்திட்டம்**

- ஒவ்வொரு விடயப்பொறுப்புக்கும் உரியதான புத்திஜீவிகளுடன் 05 சுற்று பேச்சுவார்த்தைகளை நடாத்துதல் – 2023 ஆகஸ்ட் மற்றும் செப்தெம்பர்
- ஒவ்வொரு விடயப்பொறுப்புக்கும் உரியதான வரைவுகளைத் தயாரித்தல். - 2023 ஒக்ரோபர்
- தயாரிக்கப்பட்ட வரைவு தொடர்பாக மீண்டும் ஒரு சுற்று பேச்சுவார்த்தை நடாத்துதல் - 2023 நவம்பர்
- இறுதி செயலாற்றுகைத் திட்டம் தயாரித்தல் மற்றும் செயலமர்வொன்றை நடாத்தி அதனை சரிபார்த்தல் –அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல் – 2023 டிசம்பர்

2023 இலக்கத்தைக் கொண்ட தேசிய மிருகக்காட்சிசாலைகள் சட்டம் (திருத்தப்பட்ட)

| பிரிவு இலக்கம் | 1982 இலக்கம் 41ஐக் கொண்ட தேசிய மிருகக்காட்சி சாலைகள் சட்டம் | முன்மொழியப்பட்ட திருத்தம் | திருத்தம் உள்ளடக்கப்பட்டதன் பின்னர் |
|---|---|---|---|
| நீண்ட பெயர் | இது தேசிய மிருகக் காட்சி சாலைகளை நிறுவகித்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் தொடர்பாகவும் மிருகக்காட்சி சாலைகளின் அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியத்தை தாபித்தல் தொடர்பாகவும் அதனுடன் தொடர்புடைய அல்லது அதற்கு இணையான விடயங்கள் தொடர்பானதுமான விடயங்களின் ஏற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பான ஒரு சட்டமாகும். | இதன் பின்னர் "பிரதான பிரகடனம்" என குறிப்பிடப்படும் 1982 இலக்கம் 41 இனைக் கொண்ட தேசிய மிருகக் காட்சிசாலைகள் சட்டத்தின் நீண்ட பெயர் இத்தால் நீக்கப்பட்டு அதற்கு பதிலாக பின்வரும் நீண்ட பெயரே முன்மொழிதல் | இது "வன விலங்குகளை வெளியே பாதுகாத்தல், விலங்குகளின் நலன்புரி நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தல், அதற்கான ஆய்வுகள், கற்கை நடவடிக்கைகள் என்பன தொடர்பாகவும் தேசிய மிருகக்காட்சி சாலைகளை தாபித்தல், நிர்வகித்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் தொடர்பாகவும், தேசிய மிருகக்காட்சிசாலைகளின் அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியத்தை தாபித்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் தொடர்பாகவும் அதனுடன் தொடர்புடைய அல்லது அதற்கு இணையான விடயங்கள் தொடர்பாதுமான ஏற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பான சட்டமாகும். |

| | | | |
|---|---|---|---|
| 1 | 1982 இலக்கம் 41 இனைக் கொண்ட தேசிய மிருகக் காட்சிசாலைகள் சட்டம் என்றழைக்கப்படும். | 1982 இலக்கம் 41 இனைக் கொண்ட தேசிய மிருகக் காட்சிசாலைகள் சட்டத்தினை திருத்துவது தொடர்பாக முன்வைக்கப்படுகின்ற திருத்தப்பட்ட சட்டத்தை பெயரிடல் | 1. இச்சட்டமானது 2023 இலக்கம் ................ ஐக் கொண்ட தேசிய மிருகக்காட்சிசாலைகள் (திருத்தப்பட்ட சட்டம் என்று அழைக்கப்படும்) |
| 1.1. | | சட்டத்தின் 1வது பிரிவுக்கு அடுத்த தாக, (1அ., 1ஆ., மற்றும் 1இ.) உப பிரிவினை உள்ளடக்குதல் | 1அ.இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக பயன்படுத்தப்படவே ண்டிய ஏதேனும் குறித்தொதுக்கப்பட்ட நிலப்பகுதி முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதி அமைச்சரினால் வர்த்தமானயில் பிரசுரிக்கப்படுகின்ற கட்டளகளின் மூலம் அக் கட்டளைகளில் குறித்தொதுக்கப் படக்கூடிய தினத்தில் இருந்து மிருகக்காட்சிசாலையாக அது அமைய வேண்டும் என பிரகடனப்படுத்தப்பட முடியும். |

| | | | |
|---|---|---|---|
| | | | 1ஆ.மேற்படி 1அ. உபபிரிவின் கீழ் மிருகச்காட்சிசாலை ஒன்றாக பிரகடனப்படுத்தப்பட்ட பிரதேசத்திற்கு மிருகக்காட்சிசாலையின் எல்லையில் இருந்து ஒரு குறித்தொதுக்கப்பட்ட தூரத்தினை உள்ளடக்கக்கூடிய பிரதேசத்தை குறித்த மிருகக்காட்சிசாலையின் சுய பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்துவதற்கு அமைச்சருக்கு சகல அதிகாரங்களும் தத்துவங்களும் உள்ளது. |
| **2(1)** | தேசிய மிருகக்காட்சி சாலைகளை நிர்வகிக்கும் பணி கள் தொடர்பாக | 2 (1). உப பிரிவினை நீக்கி கிழே குறிப்பிடப்பட்டுள்ள புதிய உப பிரிவுகளை சேர்த்தல் | 2 (1). தேசிய மிருகக்காட்சிசாலைகளின் பணிகள் மற்றும் பொறுப்புக்களை நிறுவகித்தல், முகாமைத்துவம் மற்றும் இச்சட்டத்தின் கீழ் உள்ள பணிகளின் வாயிலாக ஒப்படைக்கப்படுகின்ற குறித்தொதுக்கப்பட்ட அல்லது தற்காலிகமாக இணைத்துக் கொள்ளப் படுகின்ற பணியாட்டொகுதியினரின் நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் |

| | | | |
|---|---|---|---|
| | | | தொடர்பான இச்சட்டத்தின் பணிகள் அதன்கீழ் – |
| | (அ) தேசிய மிருகக்காட்சி சாலைகளின் பணிப்பாளராவதற்கு அல்லது தேசிய மிருகக்காட்சி சாலைகளின் பணிப்பாராக பதில் கடமையாற்றும் ஒருவர்; | அ. உப பிரிவினை நீக்கி கீழே குறிப் பிடப்பட்டுள்ள புதிய உபபிரிவினை சேர்த்தல் | அ. தேசிய மிருகக்காட்சிசாலைகள் பணிப்பாளர் ஒருவராக; |
| | (ஆ) தேசிய மிருகக்காட்சி சாலைகள் தொடர்பான பிரதிப் பணிப்பாளர் மற்றும் உதவிப் பணிப்பாளர் ஆவதற்கு அல்லது தேசிய மிருகக் காட்சிசாலைகள் தொடர்பான பிரதிப் பணிப்பாளர் மற்றும் உதவிப் பணிப்பாளராக பதில் கடமையாற்றும் ஒருவர் ; | ஆ. உப பிரிவினை நீக்கி கீழே குறிப் பிடப்பட்டுள்ள புதிய உபபிரிவினை சேர்த்தல் | ஆ. தேசிய மிருகக்காட்சிசாலையின் மேலதிக பணிப்பாளர்கள், பிரதிப் பணிப்பாளர்கள் மற்றும் உதவிப் பணிப்பாளர்கள் தேவைக்கேற்றவாறு |
| | (இ) இச்சட்டத்தின் பணிகள் தொடர்பாக தேவைப்படும் வேறு அவ்வாறான அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் நியமிக்கப்படல் வேண்டும். | இ. அவ்வாறே | இ. இச்சட்டத்தின் பணிகள் தொடர்பாக தேவைப்படக்கூடிய பிற அவ்வாறான அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் நியமிக்கப்படுதல் வேண்டும். |
| | 2. 2 இச்சட்டத்தின் பணிகள் தொடர்பாக நியமிக்கப்படுகின்ற அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் | 2. (2). உப பிரிவினை நீக்கி கீழே குறிப் பிடப்பட்டுள்ள புதிய உபபிரிவினை சேர்த்தல் | 2. (2). இச்சட்டத்தின் பணிகள் தொடர்பாக நியமிக்கப்படுகின்ற அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் குற்றவியல் |

| | | | |
|---|---|---|---|
| | குற்றவியல் சட்டக்கோவையின் வரைவிலக்கணத்திற்கு ஏற்றவாறு மற்றும் அதன் பணிகள் தொடர்பான அரச அலுவலர்ளாக கருதப்படும். | | தண்டனைச் சட்டத்தின் வரைவிலக்கணம் மற்றும் அதன் பணிகள் தொடர்பாக அரச அலுவலர்கள் மற்றும் 1979 இலக்கம் 15 ஐக் கொண்ட குற்றவியல் வழக்கு ஒழுங்குவிதி கோவையின் சட்டத்தின் வரைவிலக் கணத்திற்கு ஏற்றவாறு சமாதான அலுவலர்களாக கருதப்படுதல் வேண்டும். |
| (2) | | 2.(2) உப பிரிவினை நீக்கி 2(3) புதிய உபபிரிவினை சேர்த்தல் | 2.(3).2.(1). உபபிரிவின் கீழ் நியமிக்கப் படுகின்ற மேலதிக பணிப்பாளர் நாயகம், பணிப்பாளர்கள், பிரதிப் பணிப்பாளர்கள் மற்றும் உதவிப் பணிப்பாளர்கள் ஆகியோரிடையே ஒருவர் இச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்படுகின்ற மிருகக்காட்சிசாலைகளின் பொறுப்பாளராகவும், ஒரு சில அலுவலர்கள் பிரதிப் பொறுப்பாளர்களாகவும். பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்படுதல் மற்றும் அவர்களுக்கு குறித்தொதுக்கப்பட்ட |

| | | | |
|---|---|---|---|
| | | | பணிகளும் ஒப்படைக்கப்படுதல் வேண்டும். |
| | 1வது பகுதி<br>தேசிய மிருகக் காட்சிசாலைகள் பணிப்பாளரின் பொதுவான பணிப்பொறுப்புக்களும் அதிகாரங்களும் | 1வது பகுதி<br>"தேசிய மிருகக் காட்சிசாலைகள் பணிப்பாளரின்" எனும் சொல்லை நீக்கி "தேசிய மிருகக் காட்சிசாலைகள் பணிப்பாளர் நாயகத்தின் என்ற சொல்லை உள்ளடக்கப்படுதல்" | 1வது பகுதி<br>தேசிய மிருகக்காட்சிசாலைகள் பணிப்பாளர் நாயகம் ஒருவரின் பொதுவான பணிப்பொறுப்புக்களும் அதிகாரங்களும் |
| 3.(1) | (இதன் பிற்பாடு "பணிப்பாளர்" என குறிப்பிடப்படும்) தேசிய மிருகக்காட்சி சாலைகள் பணிப்பாளர், (இதன் பின்னர் "மிருகக் காட்சிசாலை" என குறிப்பிடப் படும்) தேசிய மிருகக்காட்சிசாலையின் பணிகள் மற்றும் பொறுப்புக்களை கண்காணித்தல், கட்டுப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல் சம்பந்தமாக பொறுப்புக் கூறல் வேண்டும். | பிரதான சட்டத்தின் 3.(1) உப பிரிவினை நீக்கி கீழே குறிப்பிடப் படுகின்ற புதிய பிரிவினை உள்ளடக்குதல் | 3.(1) இதன் பின்னர் "பணிப்பாளர் நாயகம்" எனக் குறிப்பிடப்படுகின்ற தேசிய மிருகக்காட்சிசாலைகள் பணிப்பாளர் நாயகம் இதன் பின்னர் தேசிய "மிருகக் காட்சிசாலைகள்" என குறிப்பிடப்படும் தேசிய மிருகக்காட்சிசாலைகளின் அனைத்து பணிகள் மற்றும் பொறுப்புக்களை முகாமைத்துவம் செய்தல் மற்றும் சட்டத்தினை அமுல்படுத்துதல் தொடர்பாக பொறுப்புக்கூற வேண்டியுள்ளதுடன் அதற்குரியதான அதிகாரங்களையும் வகிக்கக்கூடியவராவர். |

| | | | |
|---|---|---|---|
| (2) | (1) உப பிரிவின் பணிகள் தொடர்பாக பணிப்பாளரினால் மிருகக் காட்சிசாலையின் பிரதிப் பணிப்பாளர் அல்லது உதவி பணிப்பாளர் அல்லது வேறு ஏதேனும் ஒரு அலுவலரிடம் தன்வசமுள்ள அதிகாரங்ளையும் தத்துவங்களையும் கொண்டு எந்தவொரு பணியையும் ஒப்படைக்க முடிகின்றது. | 3.(2) உப பிரிவினை நீக்கிவிட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள 3.(2), 3.(3), மற்றும் 3.(4), புதிய உப பிரிவுகளை சேர்த்தல் | 3.(2). 3.(1) ஆகிய உபபிரிவுகளின் பணிகள் தொடர்பாக பணிப்பாளர் நாயகத்தினால் மேலதிக பணிப்பாளர் நாயகம், பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர், உதவிப் பணிப்பாளர் அல்லது வேறு ஏதேனும் அலுவலா ஒருவருக்கு தன் வசமுள்ள அதிகாரங்ளையும தத்துவங்களையும் கொண்டு எந்தவொரு பணியையும் ஒப்படைக்க முடிகின்றது.<br><br>3.(3).இச்சட்டத்தின் கீழ் உள்ளடக்கப்படுகின்ற மிருகக்காட்சிசாலை முகாமைத்துவம், நிர்வாகம், செயற்படுத்தல் மற்றும் அதற்குரியதான ஏனைய விடயங்களும் உள்ளடங்கும் வகையில் பணிப்பாளர் நாயகத்தினால் அதிகாரமளிக்கப்படும் அலுவலர் ஒருவரினால் முகாமைத்துவ திட்டமொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | | 3.(4).3.(3). உப பிரிவின் கீழ் தயாரிக்கப் படுகின்ற முகாமைத்துவ திட்டத்தில் உள்ளடக்கப்படவுள்ள விடயங்கள் மற்றும் அத்திட்டம் தயாரிக்கும் போது கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடைமுறை விதிகள் மற்றும் முகாமைத்துவ திட்டத்தினை வலுவானதாக்கும் பொருட்டு அமைச்சரினால் உத்தரவுளைப் பிறப்பிக்கப்பட முடியும். |

| | | | |
|---|---|---|---|
| 4. | பணிப்பாளரினால்<br><br>(அ) கட்டிடங்கள் மற்றும் வேலிகளை அமைத்தல், நீர் வசதிகளை ஏற்பாடு செய்தல் மற்றும் மிருகக்காட்சிசாலையின் நிர்வாகம் தொடர்பாக தேவையென தம்மால் கருதப்படுகின்ற ஏனைய பணிகள் தொடர்பாக ;<br><br>(ஆ) மிருகக்காட்சிசாலையிலுள்ள விலங்குகளின் பாதுகாப்பிளை உறுதிப்படுத்துவது தொடர்பாக;<br><br>(இ) வாகனப் போக்குவரத்தினை ஒழுஙகுமுறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பாக;<br><br>(ஈ) வாகனங்களை நிறுத்துவது தொடர்பாக | பிரதான பிரகடனத்தின் 4 ஆம் பிரிவினை நீக்கி கீழே குறிப்பிடப் பட்டுள்ள புதிய 4ஆம் பிரிவொன்றை உள்ளடக்குதல் | 4. பணிப்பாளர் ஒருவரினால்<br><br>அ.மிருகக்காட்சிசாலைகளிலுள்ள விலங்குகளின் நலன்புரி மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவது தொடர்பாக ;<br>ஆ.மிருகக்காட்சிசாலையினை பார்வையிடுவதற்காக வருகை தருகின்ற பார்வையாளர்களினதும் பணியாட்டொகுதியினரதும் பாதுகாப்பினை உறுதிப் படுத்துவது தொடர்பாக ;<br><br>இ. அருகி வருகின்ற மற்றும் அழிந்து விடக்கூடிய அச்சுறுத்தலுக்குள்ளாகி உள்ள சிறப்பு விலங்கினங்களின் உயிரணுத்தொகுதியினை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தல் தொடர்பாக விலங்குகள் மற்றும் தாவரவியல் சட்டத்திற்கு ஏற்றவாறு உள்நாட்டு மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | குறித்தொதுக்கப்பட்ட பிரதேசம் ஒன்றை வழங்குவது தொடர்பாக ;<br><br>(உ) மிருகக் காட்சிசாலையை பார்வையிடுவதற்காக வருகின்ற பார்வை யாளர்களின் பாதுகாப்பை உறுதிப் படுத்துவது தொடர்பாக; மற்றும்<br><br>(ஊ) மிருகக் காட்சிசாலையினால் நடாத்தப்படுகின்ற ஏதேனுமொரு பண்ணை மற்றும் அதன் உற்பத்திகளை பாதுகாப்பது தொடர்பாக; | | வெளிநாட்டு விலங்குகளை பெற்றுக்கொள்ளல் மற்றும் அவ்வாறான வேலைத்திட்டத்தின் கீழ் விலங்குகளை பரிமாற்றிக் கொள்ளல் தொடர்பாக;<br><br>ஈ.அருகி வருகின்ற மற்றும் அழிந்து விடக்கூடிய அச்சுறுத்தலுக்குள்ளாகி உள்ள சிறப்பு விலங்கினங்கள் மற்றும் அவ்விலங்குகளின் இனப்பெருக்கம் தடுத்து வைத்தல் நிலையங்கள் மற்றும் பாதுகாப்பு நிலையங்களை நிர்மாணித்தல் மற்றும் அவ்விலங்குகளை பாதுகாக்கும் பணிகள் தொடர்பாக உயிரணு வழங்கலை பாதுகாப்பு நிலையங்களை தாபிப்பது தொடர்பாக;<br><br>உ. மிருகக்காட்சிசாலையினுள் மேலதிகமான உள்நாட்டு விலங்குகள் மற்றும் அதற்கு புறம்பானவை தொடர்பாக இனப்பெருக்கத்தின் மூலம் கிடைக்கின்ற |

| | | | |
|---|---|---|---|
| | | | விலங்குகள் தொடர்பான உறுதியான செயன்முறையொன்றை கடைப்பிடித்து குறித்த அலுவலரின் அனுமதி அல்லது உடன்பாட்டுடன் தகுந்த சூழலொன்றுக்கு விடுதல், அறிமுகப்படுத்தல், விடுவித்தல் தொடர்பாக;<br><br>ஊ. மிருகக்காட்சிசாலைகள் அல்லது இச்சட்டத்தின் பணிகள் தொடர்பாக தேவைப்படுகின்ற விலங்குகளுக்குரியதான சுற்றாடல் நிலையினை ஸ்தாபிக்கும் பொருட்டு தேவைப்படுகின்ற வனாந்தரப் பொருட்கள் மற்றும் ஏனைய பொருட்களின் தேவைப்பாடுகளுக்கு அமைய குறித்த அலுவலரின் அனுமதி அல்லது உடன்பாட்டின் கீழ் இலங்கையின் இயற்கை சூழலிலிருந்து அல்லது வெளிநாடுகளில் இருந்து தருவித்துக் கொள்வது ; |

| | | | |
|---|---|---|---|
| | | | ஏ. கற்கை மற்றும் ஆய்வு நடவடிக்கைகள் தொடர்பாக உயிருள்ள அல்லது உயிரற்ற விலங்கின மாதிரிகளை ஒன்று திரட்டி பேணுவது தொடர்பாக ;<br><br>ஏ.ஏதேனுமொரு விசேட தினத்தில் அல்லது விலங்கொன்று பாய்ந்து ஓடுதல் அல்லது இவ்வாறானதொரு சூழல் அல்லது இயற்கை அனர்த்தம் போன்ற விசேட சந்தர்ப்பம் ஒன்றில் விலங்குகளினதும் பார்வையாளர்களினதும் பணியாட்டொகுதியினரதும் மற்றும் சொத்துக்களினதும் பாதுகாப்பு தொடர்பாக மிருகக்காட்சிசாலை அல்லது மிருகக்காட்சிசாலையின் குறித்தொதுக்கப்பட்ட பிரதேசம் ஒன்றை மூடுவதற்கு மற்றும் அங்கு தங்கியிருக்கின்ற பார்வையாளர்களை அப்புறப்படுத்துவதற்கு பாதுகாப்பான இடமொன்றில் வைப்பதற்கு அல்லது திறக்காதிருப்பது தொடர்பான; பாதுகாப்பு |

| | | | |
|---|---|---|---|
| | | | ஐ. மிருகக்காட்சிசாலை, மிருகக்காட்சி சாலையினுள் யாரேனும் ஒருவர் உயிராபத்திற்கு உட்பட்ட சந்தர்ப்ப மொன்றில் அந்நிலையை தவிர்த்து கொள்வது தொடர்பாக தகுந்த நடவடிக்கைகளை எடுத்தல் அல்லது அவ்வாறான நடவடிக்கை எடுப்பதற்கு சந்தர்ப்பம் அளிப்பது தொடர்பாக ;<br>ஒ. மிருகக்காட்சிசாலைகளின் முகாமைத் துவம் தொடர்பாக தேவையென பணிப்பாளர் நாயகத்தினால் கருதப்படுகின்ற உட்கட்டமைப்பு வசதிகளை மறுசீரமைத்தல் மற்றும் தேவையான அனைத்து வசதிகளுடன் கூடிய உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்பாடு செய்வது ;<br>ஓ.மிருகக்காட்சிசாலையினுள் வாகனப் போக்குவரத்து மற்றும் வாகனங்களை நிறுத்தி வைப்பதனை முறைப்படுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | | | மற்றும் கட்டுப்படுத்தல் ;<br>ஔ. மிருகக்காட்சிசாலைகளில் தரித்து வைக்கப்பட்டுள்ள விலங்குகளுக்கு தேவையான உணவுகளை பெற்றுக் கொள்வதற்காக பேணப்பட்டு வருகின்ற பண்ணைகளை தாபித்தல், நிர்வகித்தல் செயற்படுத்துதல், முகாமைப்படுத்துதல் தொடர்பாக;<br>ஃ சந்தர்ப்பத்திற் கேற்றவாறு விலங்குகளின் இறப்பு தொடர்பாக கால்நடை வைத்தியர் ஒருவர் சிபாரிசு செய்து தீர்மானம் எடுப்பது **ஆகியன** தொடர்பாக ; |
| | மிருகக்காட்சிசாலைகளினுள் நடவடிக்கை எடுக்கப்பட முடியும் | "மிருகக்காட்சிசாலைகளினுள் நடவடிக்கை எடுக்கப்பட முடியும்" **எனும்** பிரிவினை நீக்கிவிட்டு கீழே குறிப்பிடப்பட்ட பிரிவினை உள்ளடக்குதல். | மிருகக்காட்சிசாலைகளின் பணிப்பாளர் நாயகத்தினால் நடவடிக்கை எடுக்கப் படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| 5.(1) | (அ) குறித்த கட்டணத்தை செலுத்தாது மிருகக்காட்சிசாலையின் நுழைவில் இருந்து வழங்கப்படுகின்ற செல்லுபடியாகும் அனுமதிச்சீட்டு இன்றி மிருகக்காட்சி சாலையினுள் நுழைகின்ற ;<br>(ஆ) பணிப்பாளரினால் அல்லது யாரெனும் ஒரு பிரதிப் பணிப்பாளரினால் அல்லது உதவிப்பணிப்பாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்படுகின்ற ஒருவரினால் வேண்டுகோள் விடுக்கப்படும் பட்சத்தின் தமது அனுமதிச்சீட்டினை சமர்ப்பிப்பதனை நிராகரிக்கின்ற அல்லது அவ்வாறு செய்வதற்கு தவறுகின்ற ;<br>(இ) அல்லது வேறொரு நபருக்கு மிருகக்காட்சிசாலையினுள் பிரவேசிக்கக்கூடியவாறு தமக்கு வழங்கப்பட்ட அனுமதிச்சீட்டினை விற்பனை செய்கின்ற அல்லது ஒப்படைக்கின்ற அல்லது விற்பனை செய்வதற்கு அல்லது ஒப்படைப்பதற்கு | 5 ஆம் பிரிவினை நீக்கி புதிதாக 5 ஆம் பிரிவொன்றை உள்ளடக்குதல் | 5.(1) அ. குறித்த கட்டணத்தை செலுத்தி மிருகக்காட்சிசாலையின் வாயிலில் வழங்கப்படுகின்ற அனுமிப்பத்திரமின்றி மிருகக்காட்சிசாலையினுள் நுழைகின்ற ;<br>ஆ. பணிப்பாளர் நாயகத்தினால் அல்லது பணிப்பாளரினால் உரிய வகையில் அதிகாரமளிக்கப்படுகின்ற ஒருவரினால் கோரப்படும் போது தமது அனுமதிப்பத்திரத்தினை சமர்ப்பிப்பதனை நிராகரிப்பதற்கு அல்லது அவ்வாறு செய்வதற்கு தவறுகின்ற ;<br>இ. அல்லது வேறொரு நபருக்கு மிருகக்காட்சிசாலையினுள் பிரவேசிக்கக் கூடியவாறு தமக்கு வழங்கப்பட்ட அனுமதிச்சீட்டினை விற்பனை செய்கின்ற அல்லது ஒப்படைக்கின்ற அல்லது விற்பனை செய்வதற்கு அல்லது ஒப்படைப்பதற்கு முயற்சி செய்கின்ற ; |

| | | | |
|---|---|---|---|
| | முயற்சி செய்கின்ற ;<br><br>(ஈ) மிருகக்காட்சிசாலையினுள் ஏதேனுமொரு விலங்கிற்கு உணவு அளிக்காதிருக்கும்படி அறிவித்தல் மூலம் தடை செய்யப்பட்டுள்ள பிரதேசமொன்றிலுள்ள விலங்கொன்றுக்கு உணவு வழங்குவதில் ஈடுபட்டுள்ள ;<br><br>(உ) மிருகக்காட்சிசாலையினுள் வானொலி அல்லது வேறேதேனும் ஒரு ஒலிவாங்கியை பயன்படுத்தக்கூடாதென அறிவித்தல் விடுக்கப்பட்ட தடை செய்யப்பட்ட பிரதேசத்தில் அவ்வாறு வானொலி அல்லது ஒலிவாங்கி ஒன்றை பயன்படுத்துகின்ற ;<br><br>(ஊ) பணிப்பாளரின் பூரண அனுமதியின்றி பூங்காவினுள் புகைப்படைக்கருவியைப் பாவிக்கின்ற ; | | ஈ.மிருகக்காட்சிசாலையினுள் பயன்படுத்துகின்ற அனுமதிப்பத்திரம் அல்லது மிருகக்காட்சிசாலையின் செயற்பாடுகள் தொடர்பாக பயன்படுத்தப்படும் அனுமதிப்பத்திரங்களை மோசடியான வகையில் அச்சிடல், தன்வசம் வைத்திருத்தல் விற்பனை செய்தல் பயன்படுத்துதல் ;<br><br>உ. மிருக்கக்காட்சிசாலையினுள் ஏதேனுமொரு பகுதியில் நுழைவதற்கு அறிவித்தல் மூலம் தடை செய்யப் பட்டுள்ள ஒரு பகுதியினுள் அனுமதியின்றி நுழைகின்ற ;<br><br>ஊ. மிருகக்காட்சிசாலையினுள் ஏதேனுமொரு விலங்கிற்கு உணவு வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தால் மாத்திரம் மிருகக்காட்சிசாலையினுள் இருக்கின்ற ஒரு விலங்கிற்கு உணவு வழங்குதல் |

| | | | |
|---|---|---|---|
| | (ஏ) பணிப்பாளரின் பூரண அனுமதியின்றி பூங்காவினுள் ஒரு விலங்கினை கூட்டிச் செல்கின்ற ;<br><br>(ஏ) மிருகக்காட்சிசாலையினுள் துப்பாக்கி. ரவை ஏதேனும் ஒரு வெடிபொருள் போன்ற உபகரணங்களை எடுத்துச் செல்கின்ற அல்லது தம்வசம் வைத்துள்ள அல்லது தம் கட்டுப்பாட்டில் வைத்துள்ள ;<br><br>(ஐ) ஏதேனும் ஒரு துப்பாக்கியை இயக்குகின்ற அல்லது இயக்குவதற்கு முயற்சிக்கின்ற அல்லது ஏதேனும் ஒரு | | அல்லது அவ்வாறு வழங்குவதற்கு அல்லது ஒரு பொருளை உணவாக வழங்குவதில் ஈடுபட்டுள்ள ;<br>ஏ. பணிப்பாளர் நாயகத்தின் பூரண அனுமதி யின்றி மிருகக்காட்சிசாலை வளாகத்தினுள் ஏதேனுமொரு விலங்கினை எடுத்துச் செல்கின்ற, மிருகக்காட்சிசாலை வளாகத்திற்குள் எடுத்து வருகின்ற அல்லது தடுத்து வைக்கின்ற<br>ஏ. மிருகக்காட்சிசாலையினுள் துப்பாக்கி, ஆயுதம் ஏதேனுமொரு வெடிபொருள், துப்பாக்கி ரவை அல்லது வேறு வெடிபொருட்கள் அல்லது ஏதேனுமொரு விஷப்பொருளை எடுத்துச் செல்கின்ற அல்லது தம்வசம் வைத்துள்ள அல்லது தம் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல் அல்லது பயன்படுத்துதல் பயன்படுத்துகின்ற ;<br>ஐ. மிருகக்காட்சிசாலையினுள் ஏதேனுமொரு ஒலிவாங்கியை பயன்படுத்துதல் |

| | | | |
|---|---|---|---|
| | வெடிபொருளை பாவிக்கின்ற ;<br><br>(ஒ) மிருகக்காட்சிசாலையின் ஏதெனுமொரு பகுதிக்குக்குள் நுழைவதை அறிவித்தல் மூலம் தடைசெய்யப்பட்டுள்ள பகுதிக்குள் நுழைதல் ;<br><br>(ஓ) மிருகக்காட்சிசாலையினுள் ஏதெனுமொரு விலங்கிற்கு தொல்லை கொடுத்தல், குழப்புதல் அல்லது காயம் ஏற்படுத்துதல் அல்லது காட்சிக்காக வைக்கப்பட்டுள்ள விலங்கொன்றின் பாதுகாப்புக்கு அல்லது அதன் ஆரோக்கியத்திற்கு ஏதேனும் ஒரு வகையில் பாதிப்பேற்படும் வகையில் செயற்படுகின்ற ; | | தொடர்பாக அனுமதி வழங்கப்படாது இருப்பின் அவ்வாறு ஒலிவாங்கியொன்றை பயன்படுத்துகின்ற;<br><br>ஒ. மிருகக்காட்சிசாலையிலுள்ள அசையும் அல்லது அசையாத ஏதேனுமொரு சொத்தொன்றை அப்புறப்படுத்துகின்ற அல்லது அதற்கு பாதிப்பை ஏற்படுத்துகின்ற;<br><br>ஓ. பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப் பட்டுள்ள வாகனத் தரிப்பிடப் பகுதிகளி லிருந்து வெளியே வாகனமொன்றினை நிறுத்துகின்ற |

| | | | |
|---|---|---|---|
| | (ஔ) மிருக்கக் காட்சிசாலையினுள் பூங்காவில் சேவையில் ஈடுபட்டுள்ள ஒருவருக்கு இடைஞ்சல்களை ஏற்படுத்துகின்ற அச்சுறுத்துகின்ற அல்லது அவர்களுக்கு தடைகளை ஏற்படுத்துகின்ற ; | | ஔ. மிருகக்காட்சிசாலைகளில் மோட்டார் வாகனங்களை செலுத்துவதில் தடை செய்யப்பட்டுள்ள ஒரு பகுதியில் மோட்டார் வாகனங்களை செலுத்துகின்ற |
| | (ஃ) மிருகக்காட்சி சாலைக்குரிய ஏதேனுமொரு சொத்தொன்றை அப்புறப்படுத்துகின்ற அல்லது அதற்கு பாதிப்பை ஏற்படுத்துகின்ற ; | | (ஃ) பணிப்பாளர் நாயகத்தின் பூரண அனுமதி யின்றி மிருகக்காட்சிசாலை வளாகத்தின் பதாகை கையேடு டிஜிட்டல் பதாகை அறிவித்தல் அல்லது அல்லது ஏதேனு மொரு டிஜிட்டல் உபகரணங்களை விநியோகிக்கின்ற அல்லது காட்சிப்படுத்துகின்ற ; |
| | (க) பணிப்பாளரினால் வழங்கப்பட்டுள்ள வாகனத் தரிப்பிடப் பகுதியின் வெளியே வாகனமொன்றை நிறுத்துகின்ற ; | | (க) பணிப்பாளரின் பூரண அனுமதியின்றி மிருகக்காட்சிசாலையினுள் ஏதேனுமொரு பொருளை விற்பனை செய்கின்ற அல்லது விற்பனை செய்வதற்காக காட்சிப்படுத்துகின்ற ; |
| | (ச) பணிப்பாளரின் பூரண அனுமதியின்றி மிருகக்காட்சி சாலையினுள் ஏதேனுமொரு கையேடு பாரிய அறிவித்தல்கள் அல்லது பதாதைகள் அறிவித்தல் அல்லது | | (ச) இச்சட்டத்தின் கீழ் தமது அதிகாரங்களை யும் பொறுப்புக்கள் மற்றும் பணிகளை முன்னெடுக்கும் போது அல்லது நிறை |

| | | | |
|---|---|---|---|
| | ஏதேனுமொரு ஆவணமொன்றை பகிர்ந்தளிக்கின்ற அல்லது காட்சிப்படுத்துகின்ற;<br><br>(ட) மிருகக்காட்சி சாலையினுள் மோட்டார் வாகனங்கள் செலுத்துவது தடை செய்யப்பட்டுள்ள ஒரு பகுதியினுள் மோட்டர் வாகனமொன்றை செலுத்துகின்ற ; மற்றும்<br><br>(த) பணிப்பாளரின் பூரண அனுமதியின்றி மிருகக்காட்சி சாலையினுள் ஏதெனுமொரு பொருளை விற்பனை செய்கின்ற அல்லது விற்பனை செய்வதற்காக காட்சிப்படுத்துகின்ற ; | | வேற்றும் போது 2.(1).அ, 2.(1)ஆ மற்றும் 2.2 இன் கீழ் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள பணியாளர் ஒருவருக்கு அச்சுறுத்தல் விடுககின்ற அச்சம் ஏற்படுத்துகின்ற காயமேற் படுத்துகின்ற தடைகளை ஏற்படுத்துகின்ற அல்லது ஏதேனும் முறையில் அவர்களது பணிகளில் தலையீடு செய்கின்ற ;<br><br>(ட) மிருகக்காட்சிசாலை வளாகத்தினுள் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள விதத்திற்கு புறம்பாக கழிவு ளை வெளியேற்றுகின்ற;<br><br>ஒரு நபர் இச்சட்டத்தின் கீழ் குற்றவாளியாக கருதப்பட முடியும். |

| | | | |
|---|---|---|---|
| (2) | ஒரு நபர் இச்சட்டத்தின் கீழ் குற்றவாளியாக கருதப்பட முடியும்.<br><br>(1) ஆம் உபபிரிவின் கீழ் குற்றவாளியாக கருதப்படுகின்ற ஏதேனும் ஒரு தவறுக்கு குற்றவாளியாக கருதப்படுகின்ற ஒவ்வொரு நபரும் குற்றவாளியாக கருதப்படும்போது நூறு ரூபாவை விஞ்சாத தண்டப்பணத்திற்கு உட்படுதல் வேண்டும். | சட்டத்தின் 5.2 உப பிரிவினை நீக்கி 5.(2).,5.(3).,5.(4), மற்றும் 5.(5) புதிய உப பிரிவுகளை உள்ளடக்குதல் | 5.(2). 5.1 உப பிரிவின் கீழ் வருகின்ற குற்றமாக கருதப்பட்ட, குற்றமிழைப்பதற்கு இடமளிக்கின்ற, உதவி அல்லது துணை புரிகின்ற இன்றேல் அது தொடர்பாக இடமளிக்கின்ற ஒவ்வொரு நபரும் குற்றத்திற்கு குற்றவாளியாக கருதப்படுகின்றனர்.<br><br>5.(3). 5.1 அல்லது 5.(2) உபபிரிவின் கீழ் குற்றம் அல்லது மேலே எவ்வாறு குறிப்பிடப்பட்டதோ பணிப்பாளர் நாயகம் அல்லது பணிப்பாளர் நாயகத்தினால் அதிகாரம் அளிக்கப் பட்ட அலுவலர் ஒருவரினால் வழங்கப்பட்ட அனுமதியின் பேரில் அல்லது அவ்வாறான அலுவலர் ஒருவரின் கட்டளையின் பேரில் |

| | | | |
|---|---|---|---|
| | | | குறித்தொதுக்கப் பட்ட பணியொன்றில் ஈடுபட்டுள்ள ஒருவர் இப்பிரிவின் கீழ் குற்றமிழைக்கப்பட்டவராக கருதப்படாதிருத்தல் வேண்டும்.<br><br>5.(4). 5.(1) ஆம் மற்றும் 5.(2) ஆம் உப பிரிவுகளின் கீழ் உபவிதிகளின் கீழ் வரும் குற்றமொன்றுக்கு குற்றவாளியாக கருதப்பட்ட ஒரு நபர் ஐயாயிரம் ரூபாவிற்கு (5,000/=) குறையாததுமான ஐந்து இலட்சம் ரூபாவை (5,00,000/=) விஞ்சாததுமான தண்டப்பணத்திற்கு அல்லது மூன்று மாதத்திற்கு குறையாத ஐந்து வருடத்தை விஞ்சாத சிறைத்தண்டனைக்கு அல்லது தண்டத்திற்கும் சிறைத் தண்டனை ஆகிய இரண்டிற்கும் கீழ்படிய வேண்டும்.<br><br>அதற்கு மேலதிகமாக, குற்றமொன்றுக்கு குற்றவாளியாக |

| | | | |
|---|---|---|---|
| | | | கருதப்படும் ஒருவர் அரசாங்கத்திற்கு நட்டமொன்றை ஏற்படுத்தி இருப் பின் அந்நட்டத்திற்கு ஏற்புடையதான நட்டஈடு ஒன்றை விதிக்க முடியும். அவ்வாறான நட்டஈடு ஒன்று விதிக்கப்பட்டுள்ள சந்தர்பபத்தில் அதனை தண்டமாகவும் அறவிட முடியும்.<br>5(5). மேற்படி உபபிரிவின் கீழ் நட்டஈடு ஏற்றுக்கொள்ளப்பட்டபட்ட ஒரு சந்தர்ப்பத்தின் போது -:<br>அ. ஏதேனும் ஒரு சொத்து தடை செய்யப் பட்டிருப்பின் மற்றும் அச்சொத்து அரசிற்கு சொந்தமானதாக இல்லா திருப்பின் அச்சொத்தினை குற்றவாளக்கு விடுவிக்க முடியும்.<br>ஆ. குற்றவாளி கைது செய்யப்பட்டிருப்பின் அவரை தாமதமின்றி விடுவிக்க வேண்டியதுடன் அந்நபருக்கு அல்லது |

| | | | |
|---|---|---|---|
| | | | சொத்துக்களுக்கு எதிராக தொடர்ந்து வழக்கு தொடரப்படல் ஆகாது. |
| 6 (1) | 5 ஆம் பிரிவின் 1வது உப பிரிவின் கீழ் வரும் ஏதேனும் ஒரு குற்றம் நூறு ரூபாவை விஞ்சாத தொகையை ஏற்றுக்கொண்டு அக் குற்றத்தை தீர்த்துக்கொள்ளும் வகையில் பணிப்பாளரினால் ஒரு சந்தர்ப்பத்தில் அதனை சுமூகமாக தீர்த்துக்கொள்ள முடியும். மேலும் அவ்வாறான ஒரு குற்றம் சம்பந்தமாக ஒரு நபருக்கு எதிராக வழக்கொன்று தொடரும் பட்சத்தில் அவ்வழக்கு நியாயத்தீர்ப்புக்கு உட்படுவது நீதிமன்றத்தின் முன்னிலையில் அந்நீதிமன்றத்தின் விருப்புக்கமைய வழக்குத் தீர்ப்புக்கு முன்னர், ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் பணிப்பாளரினால் | சட்டத்தின் 6.(1) உப பிரிவினை நீக்கி கீழே குறிப்பிடப்பட்டுள்ள புதிய பிரிவினை உள்ளடக்குதல். | 6.(1). ஆம் பிரிவின் 5.(1) ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றம் அல்லது அவ்வாறான குற்றம் ஒன்று செய்வதற்கு துணை புரிதல் அல்லது அதற்கு உதவியளித்தல் அல்லது செய்யாத ஏதேனும் ஒரு குற்றம் ஒன்றை செய்துள்ளதாக நியாயபூர்வமாக சந்தேகிக்கும் ஒரு நபர் செய்யக் கூடிய குற்றமொன்றுக்கு நட்டஈடாக ஒருதொகை பணத்தை ஏற்றுக்கொள்ளல் அது தொடர்பாக பணிப்பாளர் நாயகத்தினால் அதிகாரம் அளிக்கப்படும் ஒரு அலுவலரினால் மேற்கொள்ள முடியும். |
| (2) | அக்குற்றத்தை சுமூக நிலையில் தீர்த்து வைத்து அவ்வழக்கினை தொடராது விலக்கிக்கொள்ள முடியும். | சட்டத்தின் 6.2 உபபிரிவில் "பணிப்பாளர்" என்பதற்குப் பதிலாக "பணிப்பாளர் நாயகம்" எனவும் " மிருகக் காட்சிசாலை" | 6.(2). பணிப்பாளர் நாயகத்தினால் 6.(1) உபபிரிவின் கீழ் ஏற்றுக்கொள்ளப்படும் தொகை இச்சட்டத்தின் கீழ் |

| | | | |
|---|---|---|---|
| | பணிப்பாளரினால் (1)ஆம் உப பிரிவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை இச்சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட மிருகக்காட்சிசாலை அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியத்திற்கு வரவு வைக்கப்படல் வேண்டும். | என்பதற்குப் பதிலாக "மிருகக்காட்சிசாலைகள் எனவும் உள்ளடக்குதல் | தாபிக்கப்பட்ட மிருகக்காட்சிசாலை அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிலையத்திற்கு வரவு வைக்கப் படுதல் வேண்டும். |
| | | சட்டத்தின் 6.2 உப பிரிவிற்கு பின்னர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள 6 (3), 6 (4) புதிய பிரிவுகளை உள்ளடக்குதல் | 6.(3). இச்சட்டத்தின் பணிகள் மற்றும் மிருகக் காட்சிசாலைக்கு சொந்தமான சொத்தொன்றின் அடையாளம் அல்லது பெறுமதி சம்பந்தமாக பணிப்பாளர் நாயகத்தின் கையொப்பத்துடன் வெளியிடப்படுகின்ற சான்றிதழ், அது தொடர்பாக நடத்தப்படும் சட்டநூலில் அல்லது வேறேனும் நடவடிக்கையின் போது முரணான விடயங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் வரை கண்ணால் கண்ட சாட்சியாக உருவகப்படுத்த முடிவதுடன் அது அங்கு குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமாக பார்வைக்கு தென்படுகின்ற |

| | | | |
|---|---|---|---|
| | | | ஒரு சாட்சியாக அமைதல் வேண்டும். |
| 7. | குற்றம் ஒன்றிற்கு குற்றமிழைக்கப் பட்டவராக கருதப்பட்டிருப்பின் கருதப் பட்டது நீதிமன்றமொன்றின் முன்னிலையில் **எனில்,** அந்நீதிமன்றத்தினால் அக்குற்றம் தொடர்பாக தண்டப்பணம் விதிக்கப்பட்டு அதில் ஒரு பகுதியை விஞ்சாத ஒரு பகுதி அல்லது உண்மையில் அறவிடப்பட்ட ஒரு காசுத்தொகையின் ஒரு பகுதியை விஞ்சாத ஒரு பகுதியை அல்லது இச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட மிருகக் காட்சிசாலைகள் அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியத்திற்கு வழங்குவது சட்ட ரீதியானதாகும். | பிரதான சட்டத்தின் 7 ஆம் பிரிவுக்கு முன்னர். 7.(1) உபபிரிவாக அழைக்கப்பட்டு அப்புதிய உபபிரிவினை சேர்த்தல்<br><br>பிரதான சட்டத்தின் 7 ஆம் பிரிவு 7.(2) உப பிரிவாக அழைக்கப்பட்டு அப்பிரிவின் "அரைவாசியை விஞ்சாத" எனும் **பதத்தை** நீக்கி விட்டு "அரைவாசிக்குக்கு குறையாத" எனும் வசனத்தை சேர்த்தல். | 7.(1). இச்சட்டத்தின் கீழ் வரும் குற்றம் சம்பந்தமாக நீதிமன்றத்தினால் விதிக்கப்படும் தண்டத்தின் அரைவாசிக்கு குறையாத தொகை மிருகக்காட்சிசாலை அபிவிருத்தி நலன்புரி நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.<br><br>7. (2) ஒரு குற்றம் ஒன்றிற்கு குற்றம் இழைக்கப் பட்டவராக கருதப் பட்டிருப்பின் கருதப்பட்டது நீதிமன்றமொன்றின் முன்னிலை யில் அந்நீதிமன்றத்தினால் அக்குற்றம் தொடர்பாக தண்டப்பணம் விதிக்கப்பட்டு அதில் ஒரு பகுதியை விஞ்சாத ஒரு பகுதி அல்லது |

| | | | |
|---|---|---|---|
| | | | உண்மையில் அறவிடப்பட்ட ஒரு காசுத்தொகையின் ஒரு பகுதியை விஞ்சாத ஒரு பகுதி அல்லது இச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட மிருகக் காட்சிசாலைகள் அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியத்திற்கு வழங்குவதற்கு உத்தரவிடப்பட வேண்டும். |
| | | | |

| | | | |
|---|---|---|---|
| பகுதி II – மிருகக்காட்சிசாலைகள் பூங்கா அபிவிருத்தி மற்றும் நல்னபுரி நிதியம் | | | |
| 8(1) | இச் சட்டத்தின் பணிகள் தொடர்பாக (இதன் பின்னர் "நிதியம்" என குறிப்பிடப்பபடுகின்ற) மிருக்காட்சிசாலைகள் அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியம் என்றழைக்கப்படும் நிதியம் ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டும். | அவ்வாறே. | 8. (1) இச் சட்டத்தின் பணிகள் தொடர்பாக (இதன் பின்னர் "நிதியம்" என குறிப்பிடப்பபடுகின்ற) மிருக்காட்சிசாலைகள் அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியம் என்றழைக்கப்படும் நிதியம் ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டும். |
| (2) | (அ) எந்தவொரு மூலத்தின் வாயிலாகவோ நன்கொடையாக கிடைக்கப்பெறும் சகலவிதமான பணமும் | அவ்வாறே. | 8.(2).(அ) எந்தவொரு மூலத்தின் வாயிலாகவோ நன்கொடையாக கிடைக்கப்பெறும் சகலவிதமான பணமும்; |
| | (ஆ) 6 ஆம் பிரிவின் கீழ் பணிப்பாளரினால் அறவிடப்படக்கூடிய சகலவிதமான பணமும் | சட்டத்தின் 8.(2) ஆ. உப பிரிவின் "பணிப்பாளர்" எனும் சொல்லை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக "பணிப்பாளர் நாயகம்" எனும் சொல்லை பயன்படுத்தல். | (ஆ) 6 ஆம் பிரிவின் கீழ் பணிப்பாளர் நாயகத்தினால் அறவிடப்படக்கூடிய சகலவிதமான பணமும்; |
| | (இ)தண்டப்பணமாக அறவிடப்படக்கூடிய சகலவிதமான பணமும் | அவ்வாறே. | (இ) தண்டப்பணமாக அறவிடப்படக்கூடிய சகலவிதமான பணமும்; |
| | (ஈ) 'பூங்கா உற்பத்திகளை விற்பனை செய்து பெறக்கூடிய சகலவிதமான பணமும் மற்றும் | சட்டத்தின் 8.(2) ஆ. உப பிரிவின் "பூங்கா" எனும் சொல்லை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக "மிருகக்காட்சிசாலை" எனும் சொல்லை பயன்படுத்தல். | (ஈ) பூங்கா உற்பத்திகளை விற்பனை செய்து பெறக்கூடிய சகலவிதமான பணமும்; மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | (உ) எந்தஒரு மூலத்திலிருந்தேனும் வருமானமொன்றாக பெறப்பட்ட சகலவிதமான பணமும் நிதியத்திற்கு வழங்கப்படுதல் வேண்டும். | அவ்வாறே. | (உ) எந்தவொரு மூலத்திலிருந்தேனும் வருமானமொன்றாக பெறப்பட்ட சகலவிதமான பணமும் நிதியத்திற்கு வழங்கப்படுதல் வேண்டும். |
| (3) | கீழே குறிப்பிடப்பட்டுள்ள காசு, நிதிக்கான விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளரது பூரண அங்கீகாரத்தின் கீழ், நிதியத்தினால் வழங்குவதற்கு முடியும். | அவ்வாறே | (3). கீழே குறிப்பிடப்பட்டுள்ள காசு, நிதிக்கான விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளரது பூரண அங்கீகாரத்தின் கீழ், நிதியத்தினால் வழங்குவதற்கு முடியும். |
| | (அ) மிருகக் காட்சிசாலைக்கு வருகை தரும் பார்வையாளர்களுக்கு துணைச் சேவைகளை வழங்குவதற்குத் தேவைப்படும் அனைத்துப் பணமும் | சட்டத்தின் 8.(3) அ. உப பிரிவின் "மிருகக்காட்சிசாலைக்கு" எனும் சொல்லை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக "மிருகக்காட்சிசாலை தொடர்பாக" எனும் சொல்லை பயன்படுத்தல். | (அ) மிருகக்காட்சிசாலைக்கு வருகை தரும் பார்வையாளர்களுக்கு துணைச் சேவைகளை வழங்குவதற்குத் தேவைப்படும் அனைத்துப் பணமும்; |
| | (ஆ) மிருகக் காட்சிசாலையின் பணியாளர்களது நலன்புரி மற்றும் உத்தேச ஊக்குவிப்பு திட்டங்களுக்குத் தேவையான அனைத்துப் பணமும் மற்றும் | சட்டத்தின் 8.(3) ஆ. உப பிரிவின் "மிருகக்காட்சிசாலையின்" எனும் சொல்லை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக "மிருகக்காட்சிசாலை" எனும் சொல்லை பயன்படுத்தல். | (ஆ) மிருகக்காட்சிசாலையின் பணியாளர்களது நலன்புரி மற்றும் உத்தேச ஊக்குவிப்பு திட்டங்களுக்குத் தேவையான அனைத்துப் பணமும்; மற்றும |

| | | | |
|---|---|---|---|
| | (இ) குறிப்பாக வேறுவிதமாக ஏற்பாடுகள் செய்திருந்தாலே தவிர, இச் சட்டத்தின் பணிகள் தொடர்பாக தேவையான அனைத்துச் செலவுகளும் | அவ்வாறே. | (இ) குறிப்பாக வேறுவிதமாக ஏற்பாடுகள் செய்திருந்தாலே தவிர, இச் சட்டத்தின் பணிகள் தொடர்பாக தேவையான அனைத்துச் செலவுகளும் |
| (4) | பணிப்பாளர் நிதியத்தின் நிர்வாகம் தொடர்பாக பொறுப்புக்கூற கடமைப்பட்டுள்ளார். | சட்டத்தின் 8.(4) உப பிரிவின் "பணிப்பாளர்" எனும் சொல்லை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக "பணிப்பாளர் நாயகம்" எனும் சொல்லை பயன்படுத்தல். | 8.(4). பணிப்பாளர் நிதியத்தின் நிர்வாகம் தொடர்பாக பொறுப்புக்கூற கடமைப்பட்டுள்ளார். |
| (5) | நிதியத்தின் கணக்குகள், கணக்காய்வாளர் அதிபதியினால் கணக்காய்வுக்குட்படுத்தப்படல் வேண்டும். | அவ்வாறே.<br><br>சட்டத்தின் 8.(5). உப பிரிவிற்கு அடுத்ததாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள 8.(6). புதிய உப பிரிவினைச் சேர்த்தல்; | 8.(5). நிதியத்தின் கணக்குகள், கணக்காய்வாளர் அதிபதியினால் கணக்காய்வுக்குட்படுத்தப்படல் வேண்டும்.<br>8.(6).அ. இச்சட்டத்திற்கு உரியதான பணியில் ஈடுபட்டுள்ள போது அல்லது அவ்வாறான பணியில் ஈடுபட்டுள்ளதாக குறிப்பாக உறுதிப்படுத்த முடியுமான சந்தர்ப்பமொன்றில், 2.(1) அ. 2.(1) ஆ மற்றும் 2.2. இன் கீழ் அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஊழியர் ஊனமுற்றிருப்பின், இயலாமைக்குள்ளாகியிருப்பின் அல்லது மரணமடைந்திருப்பின் ஊழியருக்கு அல்லது சட்டபூர்வ வாரிசுகளுக்கு நட்டஈடு வழங்கும் பொருட்டு நிதியத்தைப் பயன்படுத்த முடியும். |

| | | | |
|---|---|---|---|
| | | | 8.(6). ஆ. மேற்படி 8.(6).அ. உப பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நட்டஈட்டை ஊனமடைதல், இயலாமை இல்லது இறப்பு என்பன சம்பந்தமாக ஓய்வூதிய ஒழுங்குவிதிக் கோவை அல்லது அது தொடர்பாக ஏற்புடைய வேறேதும் எழுத்துமூல சட்டத்தின் கீழ் வழங்கப்படும் நட்டஈட்டுக்கு மேலதிகமாக இருத்தல் வேண்டும்.<br><br>8.(6). இ. மேற்படி 8.(6).அ. உப பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஊனமடைதல், இயலாமை அல்லது மரணம் சம்பந்தமான நட்டஈடாக செலுத்தப்படும் நட்டஈட்டுத் தொகை குறிப்பிட்ட தகுவிதிகளுக்கு இணங்க பணிப்பாளர் நாயகத்தினால் சட்டபூர்வமாக உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். அதனுடன் தொடர்புடைய தகுவிதிகள் பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட குழுவொன்றின் மூலம் தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| பகுதி III - நானாவித | | | |
| 9(1) | மிருகக்காட்சிசாலை சம்பந்தமான அனைத்து விடயங்கள் மற்றும் பிரச்சினைகள் பற்றி பணிப்பாளருக்கு ஆலோசனை வழங்குவதற்கும் அமைச்சருக்கு பலாிப்புரைகளை வழங்குவதற்கும் | பிரதான சட்டத்தின் 9 பிரிவை நீக்கி, கீழே குறிப்பிடப்பட்ட புதிய பிரிவினைச் சேர்த்தல். | 9. மிருகக்காட்சிசாலையின் பணிப் பொறுப்புக்களை நிறைவேற்றும் போது குறித்தொதுக்கப்பட்ட விடயங்கள் சம்பந்தமான சிபார்சுகள், ஆலோசனைகள் அல்லது வழிகாட்டல்களைப் |

| | | | |
|---|---|---|---|
| | தலைவராக பணிப்பாளரையும், பதினொரு நபர்களையும் கொண்ட ஆலோசனைக் குழவை அமைச்சரினால் நியமிப்பதற்கு முடியும். | | பெற்றுக் கொள்வது தொடர்பாக உசிதமான நபர்களைக் கொண்ட குழுவொன்று அமைச்சரினால் நியமிக்கப்படும். தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்திற் குரிய நேர் அமைச்சின் செயலாளர் அக் குழுவின் தலைவராக விளங்குவார். |
| 9(2) | செயற்குழுக் கூட்டங்கள், ஆக குறைந்தது ஒவ்வொரு ஆண்டிலும் இரு தடவைகள் கூட்டப்படுதல் வேண்டும். | பிரதான சட்டத்தின் 9.(2) மற்றும் 9(3)ஆம் உப பிரிவுகளை நீக்குதல். | |
| 9(3) | ஏற்பாடுகளில் குறித்தொதுக்கப்படாத எந்தவொரு நடைமுறைவிதி சார்ந்த விடயமொன்று சம்பந்தமாக சுய நடைமுறைவிதியைத் தீர்மானிப்பதற்கு ஆலோசனைக் குழுவுக்கு உரிமையுண்டு. | | |
| 10 (1) | மிருகக்காட்சிசாலைக்குரிய சொத்தாக கருதப்படும் ஒரு விலங்கு ஒரு நபரினால் தம்வசம் அல்லது பராமரிப்பில் வைத்திருப்பதாக நம்புவதற்கு பணிப்பாளருக்கு நியாயமான காரணங்கள் இருப்பின் அல்லது அது தொடர்பாக எழுத்துமூல அதிகாரமளிக்கப்பட்ட ஒரு நபரினால் -<br><br>(அ) அவ்வாறான விலங்கொன்று இருக்கமுடியுமென நம்புவதற்கு பணிப்பாளருக்கு நியாயமான காரணங்கள் இருப்பின் எந்தவொரு | சட்டத்தின் 10(1) உப பிரிவில் காணப்படும் "விலங்கொன்று" என்பதற்கு உடனடியாக "அல்லது உயிருள்ள அல்லது உயிரற்ற மிருக உடற்பாகம்" எனும் வசனத்தை உள்ளடக்குதல் மற்றும் "பணிப்பாளர்" எனும் சொல்லை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக "பணிப்பாளர் நாயகம்" எனும் சொல்லை பயன்படுத்தல்.<br><br>சட்டத்தின் 10(1)(அ) உப பிரிவில் காணப்படும் "விலங்கொன்று" என்பதற்கு உடனடியாக "அல்லது உயிருள்ள அல்லது உயிரற்ற | 10.(1). மிருகக்காட்சிசாலைக்குரிய சொத்தாக கருதப்படும் ஒரு விலங்கு அல்லது உயிருள்ள அல்லது உயிரற்ற மிருக உடற்பாகம ஒரு நபரினால் தம்வசம் அல்லது பராமரிப்பில் வைத்திருப்பதாக நம்புவதற்கு பணிப்பாளருக்கு நியாயமான காரணங்கள் இருப்பின் அவ்வாறான சந்தர்ப்பத்தில் பணிப்பாளர் நாயகத்தினால் அல்லது அது தொடர்பாக எழுத்துமூல அதிகாரமளிக்கப்பட்ட ஒரு நபரினால் -<br><br>அ. அவ்வாறான விலங்கு அல்லது உயிருள்ள அல்லது உயிரற்ற மிருக உடற்பாகம் ஒரு நபரினால் தம்வசம் அல்லது பராமரிப்பில் |

| | | | |
|---|---|---|---|
| | இடத்திற்கும் அல்லது வாகனத்தில் இருந்தவாறு அதனை பரிசோதித்தல் ; மற்றும் | மிருக உடற்பாகம்" எனும் வசனத்தை உள்ளடக்குதல் | வைத்திருப்பதாக நம்புவதற்கு பணிப்பளாருக்கு நியாயமான காரணங்கள் இருப்பின் எந்தவொரு இடத்திற்கும் அல்லது வாகனத்தில் இருந்தவாறு அதனை பரிசோதித்தல் ; மற்றும் |
| | (ஆ) அம் மிருகத்தின் உரித்துரிமையை மீளப் பெறுவது சட்டபூர்வமானதாகும். | சட்டத்தின் 10(1)(ஆ) உப பிரிவில் காணப்படும் "உடைமை" என்பதற்கு உடனடியாக "அல்லது உயிருள்ள அல்லது உயிரற்ற மிருக பகுதி" எனும் வசனத்தை உள்ளடக்குதல் | ஆ. அம் மிருகத்தின் உரித்துரிமை அல்லது உயிருள்ள அல்லது உயிரற்ற மிருக உடற்பாகத்தை மீளப் பெறுவது சட்டபூர்வமானதாகும். |
| 10(2) | (1) ஆம் பிரிவின் நியமங்களுக்கு அமைய ஏதேனுமொரு விலங்கு அப்புறப்படுத்தப்பட்டது ஒரு நபரின் பொறுப்பிலிருந்தோ அல்லது பாதுகாப்பிலிருந்தோ ஆயின், அந் நபர், அவ்விலங்கின் உரித்துரிமையை மீளப் பெற்றுக் கொள்வதற்கு கருதும் பட்சத்தில் அவ்விலங்கு அவருக்குச் சொந்தமானது என்பது பற்றி உறுதிப்படுத்துவது அந்நபரது பொறுப்பாகும் | அவ்வாறே. | 10. (2). 10. (1) ஆம் உப பிரிவின் நியமங்களுக்கு அமைய ஏதேனுமொரு விலங்கு அப்புறப்படுத்தப்பட்டது ஒரு நபரின் பொறுப்பிலிருந்தோ அல்லது பாதுகாப்பிலிருந்தோ ஆயின், அந் நபர், அவ்விலங்கின் உரித்துரிமையை மீளப் பெற்றுக் கொள்வதற்கு கருதும் பட்சத்தில் அவ்விலங்கு அவருக்குச் சொந்தமானது என்பது பற்றி உறுதிப்படுத்துவது அந்நபரது பொறுப்பாகும் |

| | | | |
|---|---|---|---|
| | | சட்டத்தின் 10.(2). உப பிரிவிற்குப பின்னர் 10.(3) புதிய உப பிரிவைச் சேர்த்தல். | 10. (3). அவ்வாறு பொறுப்பேற்கப்படும் ஏதேனுமொரு விலங்கு அல்லது விலங்குகள் மிருகக்காட்சிசாலை அலுவலரொருவரின் பொறுப்பில் வைத்திருக்கப்படும் போது அவ்வாறு தற்காலிகமாக தடுத்து வைக்கப்படும் குறித்தொகுக்கப்பட்ட நிலப்பகுதி மற்றும் குறித்த விலங்கு சம்பந்தமாக இச்சட்டத்தின் ஏற்பாடுகளை ஏற்புடையதாக கருத முடியும். |
| 11 | இச்சட்டத்தின் கீழ் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்வதற்கு கருதும் ஏதேனுமொரு நடவடிக்கை தொடர்பாக அரசாங்க அலுவலர் ஒருவருக்கு எதிராக சிவில் வழக்கோ அல்லது குற்றவியல் வழக்கோ தொடராதிருத்தல் வேண்டும். | சட்டத்தின் 11 ஆம் பிரிவின் "கருதப்பட்ட" என்பதற்கு உடனடியாக "அல்லது செய்யாது விடப்பட்ட" எனும் வசனத்தை சேர்த்தல். | 11. இச்சட்டத்தின் கீழ் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்வதற்கு கருதும் அல்லது செய்யாது விடப்பட்ட ஏதேனுமொரு நடவடிக்கை தொடர்பாக அரசாங்க அலுவலர் ஒருவருக்கு எதிராக சிவில் வழக்கோ அல்லது குற்றவியல் வழக்கோ தொடராதிருத்தல் வேண்டும். |
| 12 | இச்சட்டத்தின் மூலம் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களையும் தத்துவங்களையும் அமுல்படுத்துகின்ற அல்லது பணியை மேற்கொள்கின்ற ஒரு நபரைத் தாக்குதல், தடையேற்படுத்துகின்ற, அச்சுறுத்துகின்ற, அச்சமூட்டுகின்ற, துன்புறுத்துகின்ற, அவமதிக்கின்ற ஒவ்வொரு நபரும் ஒரு குற்றத்திற்கு குற்றவாளியாக இருப்பதோடு, | சட்டத்தின் 12 ஆவது பிரிவினை நீக்கி, கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரிவினைச் சேர்த்தல். | 12. இச்சட்டத்தின் மூலம் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களையும் தத்துவங்களையும் அமுல்படுத்துகின்ற அல்லது பணியை மேற்கொள்கின்ற ஒரு நபரைத் தாக்குதல், தடையேற்படுத்துகின்ற, அச்சுறுத்துகின்ற, அச்சமூட்டுகின்ற, ஏதேனுமொரு வகையில் அவரது பணிகளில் தலையீடு செய்கின்ற ஒரு நபர் குற்றமிழைப்பதுடன், குற்றவாளியாக கருதப்படும் |

| | | | |
|---|---|---|---|
| | குற்றவாளியாக கருதப்படும் பட்சத்தில் அவர் நூறு ரூபாய் தொகையை விஞ்சாத தண்டத்திற்குக் கட்டுப்படுதல் வேண்டும். | | போது, மூன்று ஆண்டுகளுக்குக் குறையாததும் ஏழு ஆண்டுகளை விஞ்சாததுமான சிறைத்தண்டைக்கு அல்லது ஐம்பதாயிரம் ரூபாவிற்குக் (ரூபா 50,000) குறையாமலும், ஒரு இலட்சத்து ஐம்பதாயிரத்துக்கு (ரூபா 150,000) விஞ்சாததுமான தண்டப்பணத்திற்கு அல்லது அவ்விரு தண்டனைகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| 13 (1) | இச் சட்டத்தினால் உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டுமென குறித்தொதுக்கப்பட்ட ஒரு விடயம் சம்பந்தமாக அல்லது கட்டளைகளை பிறப்பிப்பதற்கு இச் சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு விடயம் சம்பந்தமாக அமைச்சரினால் கட்டளை பிறப்பிக்க முடியும். | சட்டத்தின் 13 ஆவது பிரிவினை நீக்கி, கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரிவினைச் சேர்த்தல். | 13.(1). அமைச்சரினால் மிருகக்காட்சிசாலைகள் அல்லது ஏதேனுமொரு மிருகக்காட்சிசாலையின் குறித்தொதுக்கப்பட்ட ஒரு பகுதி அல்லது சுய பாதுகாப்பு வலயம் அல்லது தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தின் கீழுள்ள வேறொரு நிலப்பகுதி ஆகியன சம்பந்தமாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களூடாக அல்லது இச்சட்டத்தின் வாயிலாக உத்தரவிடப்பட வேண்டுமென அடையாளங் காணப்படுகின்ற பணி அல்லது பிற அதனுடன் இணைந்த பணிகள் தொடர்பாக உத்தரவு பிறப்பிக்கப்பட முடியும்.<br><br>அ. மிருகக்காட்சிசாலையன் நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம்.<br><br>ஆ. இச்சட்டத்தின் கீழ் பிரசுரிக்கப்படுகின்ற சுயபாதுகாப்பு வலஅம் முயத்தின் பணிகளை கண்காணித்தல்.<br><br>இ. முகாமைத்துவ திட்டத்தில் உள்ளடக்கப்படவுள்ள விடயங்கள் மற்றும் அம்முகாமைத்துவத் திட்டம் தயாரிக்கும்போதும் நடைமுறைப்படுத்தும் போதும் கடைப்பிடிக்கப்பட வேண்டிய விதம் மற்றும் அலுவலக நடைமுறையைத் தயாரித்தல். |

| | | | |
|---|---|---|---|
| | | | ஈ. மிருகக்காட்சிசாலையின் வலுவாதார முகாமைத்துவத்தின் போது மக்கள் தொகுதியினரதும் அரச சார்பற்ற பிரிவினதும் பங்களிப்பினைப் பெற்றுக் கொள்ளும் பணி தொடர்பாக முகாமைத்துவ உடன்படிக்கைகளை தயாரித்தல்.<br><br>உ மிருகக்காட்சிசாலையின் முகாமைத்தவம் தொடர்பாக குறித்த ஒப்பந்தங்களை மேற்கொள்ளல், அவ் ஒப்பந்தங்களை இரத்துச் செய்தல், நிபந்தனை விதித்தல், கட்டணங்களை விதித்தல், பிரச்சினைகளை சுமுகமாகத் தீர்த்தல் என்பன தொடர்பாக மூலோபாயங்களைவ வகுத்தல்.<br><br>ஊ. முகாமைத்துவ பங்காளிகள் மற்றும் பங்குதாரர்களிடையே நலன்களைப் பகிர்ந்து கொள்ளும் பொறிமுறையொன்றைத் தயாரித்தல்.<br><br>எ மிருகக்காட்சிசாலையினுள் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளுக்கு உரியதான நிபந்தனைகள் மற்றும் கட்டணங்களை விதித்தல்.<br><br>ஏ. மிருகக்காட்சிசாலையில் விஞ்ஞான ஆய்வுகளை |

| | | | |
|---|---|---|---|
| | | | மேற்கொள்வது தொடர்பாக அனுமதியளிக்கப்படும் பிரதேசம் மற்றும் அவ்வாறு ஆய்வு செய்யும் போது கட்டுப்பட வேண்டுமென கருதப்படும் நிபந்தனைகளை விதித்தல்.<br>ஐ. மிருகக்காட்சிசாலையின் அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியத்திற்கு மேலதிகமாக வழங்கப்படுகின்ற நன்கொடைகளை குறித்த நன்கொடை வழங்கப்பட்ட தரப்பினால் இணக்கம் தெரிவிக்கப்பட்ட பணிகளில் ஈடுபடுத்துவதற்கு பொது திறைசேரியின் எழுத்துமூல அங்கீகாரத்துடன் ஆரம்பிக்கப்படும் விசேட கணக்கில் வைப்பிலிட்டு செலவிடும் பொருட்டு சந்தர்ப்பத்திற்கேற்றவாறு உத்தரவுகளைப் பிறப்பித்தல். . |
| (2) | ஆமைச்சரால் விடுக்கப்படும் ஒவ்வொரு உத்தரவும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டியதுடன், அவ்வாறு பிரசுரிக்கப்பட்ட திகதியில் இருந்து அல்லது நிபந்தனையில் குறிப்பிடப்பட்ட பிந்திய திகதியிலிருந்து அமுலுக்குவரும். | அவ்வாறே. | 13.(2). அமைமச்சரினால் பிறப்பிக்கப்படும் அனைத்து உத்தரவுகளும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டியுள்ளதுடன், அவ்வாறு பிரசுரிக்கப்படும் தினத்தில் இருந்து அல்லது நிபந்தனையில் குறிப்பிட்டுள்ள பின்னரான தினத்தில் இருந்து அமுல்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (3) | ஓவ்வொரு நிபந்தனையும், வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதன் பினனர் கூடிய சீக்கிரமாக பாராளுமன்றத்திறகு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத தினத்தில் இருந்து தொடரப்பட்டதாக கருதப்பட வேண்டியிருந்த போதிலும், அதன் கீழ் செய்யப்பட்ட எந்த விடயத்திற்கும் பாதிப்பு ஏற்படலாகாது. | சட்டத்தின் 13.(3). உப பிரிவில் இயலுமான கூடிய விரைவில்" என்பதற்கு உடனடியாக "அனாவசிய தாமதமின்றி" எனும் வசனத்தை சேர்த்தல். | 13.(3). ஓவ்வொரு நிபந்தனையும், வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதன் பின்னர் கூடிய விரைவில், அனாவசிய தாமதங்களின்றி அங்கீகாரத்திற்காக பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத நிபந்தனையொன்று அங்ககாரமளிக்கப்படாத தினத்தில் இருந்து திருத்தப்பட்டதாக கருதப்பட வேண்டியிருந்த போதிலும், அதன் கீழ் செய்யப்பட்ட எதற்கும் எதுவித பாதிப்பும் ஏற்படாதிருத்தல் வேண்டும். |
| (4) | அமைச்சரினால் விடுக்கப்பட்ட ஏதேனுமொரு உத்தரவு தொடரப்படும் என கருதப்படுகின்ற திகதி தொடர்பான அறிவிப்பு வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுதல் வேண்டும்.. | அவ்வாறே. | 13.(4). அமைச்சரினால் பிறப்பிக்கப்பட்ட எந்தவொரு உத்தரவும் திருத்தப்பட்டதாக கருதப்படும் திகதி பற்றி வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்படுதல் வேண்டும். |
| | | சட்டத்தின் 13.(4) உப பிரிவிற்குப் பின்னர் 13.(5) உப பிரிவினைச் சேர்த்தல். | 13.(5). இச் சட்டத்தின் கீழ் பிரசுரிக்கப்படாத அரச அல்லது அரசாங்கத்தினல்லாத மிருகக்காட்சிசாலை அல்லது விலங்குகளைத் தடுத்து வைத்திருக்கும், காட்சிப்படுத்துகின்ற, விற்பனை நிலையங்களைப் பதிவு செய்தல், ஏற்பாடுகளைத் தயாரித்தல், நிபந்தனைகளை விதித்தல் மற்றும் அதற்கு ஏற்புடையதான விடயங்கள சம்பந்தமாக அமைச்சரினால் உத்தரவு பிறப்பிக்க முடியும். |

| | | | |
|---|---|---|---|
| 14 | புதங்கள் சம்பந்தமாக வேறுவிதமாக அர்த்தம் தேவைப்பட்டாலே தவிர, இச் சட்டத்தில் -<br>"விலங்கு" எனும்போது முதகெலும்புள்ள மற்றும் முதுகெழும்பில்லாத எல்லா விலங்குகளும் கருதப்படுவதுடன், அதில் எல்லாவிதமான பறவைகளும், மீனினங்களும், ஊர்வனவும் உள்ளடங்குகின்றன;<br><br>மேலும், "தேசிய மிருகக்காட்சிசாலை" எனும்போது அரசாங்க மீன் தடாகம், இரத்மலானையிலுள்ள மிருகக்காட்சிசாலை பண்ணை மற்றும் ரம்புக்கனையில் அமைந்துள்ள பின்னவல யானைகள் சரணாலயம் என்பனவும் உள்ளடங்குகின்றன. | சட்டத்தின் 14 ஆவது பிரிவினை நீக்கி, கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரிவினைச் சேர்த்தல். | "விலங்கு" எனும்போது முதகெலும்புள்ள மற்றும் முதுகெழும்பில்லாத எல்லாவித விலங்குகளும் கருதப்படுகின்றன. "மிருகக்காட்சிசாலைகள்" எனும் போது மிருகக்காட்சிசாலைகள், சபாரி பூங்காக்கள், யானைகள் சரணாலயங்கள், மீன் தடாகம், விலங்கு இனப்பெருக்க நிலையம், விலங்குகள் பாதுகாப்பு நிலையம், உயிரணுக்கள் பாதுகாப்பு நிலையம், மிருகக்காட்சிசாலைக்குரிய கற்கை நிலையம், மிருகக்காட்சிசாலைக்குரிய நூதனசாலை, மிருகக்காட்சிசாலைக்குரிய பண்ணை என்பன உட்பட தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்திற்குரிய அனைத்து நிறுவனங்களும் உள்ளடங்குகின்றன.<br><br>"மிருகக்காட்சிசாலை பொறுப்பாளர்" எனும் போது ஒரு மிருகக்காட்சிசாலையை நிர்வகித்தல் மற்றும் முகாமைத்துவம் செய்யும் பொருட்டு பணிப்பாளர் நாயகத்தினால் சரியான நேரத்தில் நியமிக்கப்படுகின்ற ஒரு அலுவலரைக் குறிக்கின்றது. |

இணைப்பு 01

**1982 இல. 41 ஐக் கொண்ட தேசிய மிருகக்காட்சிசாலைகள் சட்டத்திருத்தம் பற்றிய அறிக்கை**

2010 ஆண்டில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வந்த முறைப்பாட்டு இல. 777/2010 ஐக் கொண்ட முறைப்பாட்டுக்கு அமைய, மனுதாரர்கள், மிருகக்காட்சிசாலைகள் சட்டம் மற்றும் இன்னும் பல சட்டங்கள் திருத்தப்பட வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர். அம் முறைப்பாடு விசாரணையில் வழங்கப்பட்ட உத்தரவுக்கமைய, அம் முறைப்பாட்டுக்கு உரியதான சட்டங்கள் திருத்தப்பட வேண்டியுள்ளன. மேலும் அம் மனுதார்களினால் சட்டத்திற்கு சமர்ப்பிப்பதற்காக முன்மொழிவுகளும் வைக்கப்பட்டுள்ளன.

தேசிய மிருகக்காட்சிசாலைகள் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வது தொடர்பாக அப்போதைய திணைக்களத்திற்கு சொந்தமான அமைச்சின் செயலாளரினால் குழுவொன்று நியமிக்கப்பட்டு, அக்குழுவினால் முன்வைக்கப்பட்ட திருத்தங்களுக்குரியதான முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

அம் முன்மொழிவுகள் உள்ளடங்களாக, சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வது தொடர்பாக இல. අමප/19/1998/106/029 மற்றும் 2019.08.07 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் அங்கீகாரமளிக்கப்பட்டது. அதற்கமைய, சட்டத்திற்குரியதான திருத்தங்கள் உள்ளடக்கப்பட்ட வரைவு 2019.09.12 ஆந் திகதி அமைச்சரவையின் மூலம் சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டது.

சட்ட வரைஞர் திணைக்களத்தின் இல. LDO 54/2019 ஐக் கொண்ட 2020.02.24 ஆந் திகதிய கடிதம் மூலம் புதிய அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றை மீண்டும் அனுப்பும்படி அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, புதிய அமைச்சரவை விஞ்ஞாபனம் தொடர்பான அங்கீகாரம் 2021 ஏப்ரல் 19 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது கிடைக்கப் பெற்றது. (இல. අමප 21/0614/314/006 மற்றும் 2021.04.28 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனம்)

புதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அங்கீகாரம் கிடைக்கப் பெற்றதன் பின்னர், வரைவு மீண்டும் 2021.05.17 ஆந் திகதி அமைச்சினூடாக சட்ட வரைவு திணைக்களத்திற்கு

அனுப்பப்பட்டுள்ளது. சட்ட வரைஞர் திணைக்களத்தின் இல. LDO 54/2019 ஐக் கொண்ட 2022.09.23 ஆந் திகதிய கடிதம் மூலம் அது தொடர்பான அவதானிப்புக்களை வழங்கும்படி தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்திற்குரிய அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அக்கடிதத்துக்கு அமைய, அதற்குரிய அவதானிப்புக்கள் 2022.11.22 ஆந் திகதி இத் திணைக்களத்திற்குரிய அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அமைச்சினால் அதற்குரியதான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, 2023.01.23 ஆந் திகதி சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

2019 ஆண்டில் தயாரிக்கப்பட்ட வரைவு விரிவாக திருத்தப்பட வேண்டியது அத்தியாவசியமாகும். அதற்கான காரணம், அடிக்கடி தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்திற்குரியதான அமைச்சுக்களின் அமைச்சர்களினதும் செயலாளர்களினதும் கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகள் மாற்றமடைவதேயாகும். மேலும், பரந்துபட்டதும் சிக்கலானதுமான பரப்புடன் திணைக்களம், விலங்கு பாதுகாப்பு தொடர்பாக அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்றமையினால், திணைக்களத்தின் பணிகளை மிகவும் சிறந்த முறையில் உரிய வகையில் பேணிச் செல்வதற்கு உசிதமானவாறு அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்டு அவ் வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது.

மேலும், 1982 இல. 41 ஐக் கொண்ட தேசிய மிருககாட்சிசாலைகள் சட்டமானது 37 வருடங்களாக திருத்தப்படாமையின் காரணமாக தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தின் தற்போதைய செயற்பாடுகள், உத்தேச புதிய செயற்பாடுகளுக்கு ஏற்றவாறு உசிதமான சட்ட வரைவுகளை தயாரித்தல் மற்றும் அச்சட்டத்தின் ஏற்பாடுகளை திருத்துவது அவசியமாகும். அதற்கமைய, தயாரிக்கப்பட்ட வரைவு இணைப்பு 01A என இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

தற்போது சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பியுள்ள சிய தேசிய மிருகக்காட்சிசாலைகள் சட்டத்தின் புதிய வரைவின் 14 ஆம் பிரிவின் பதங்கள் குறித்த வரைவிலக்கணம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது (இணைப்பு 01A). அதனூடாக தற்போது தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்திற்குரிய நிறுவனங்கள் மற்றும் எதிர்காலத்தில் திணைக்களத்திற்குள் உள்ளடக்கப்பட வேண்டும் எனக் கருதப்படும் நிறுவனங்களும் உள்ளடக்கப்படும்.

2023.07.05 ஆந் திகதி பாராளுமன்ற கணக்குகள் மீதான செயற்குழுவினால் உத்தரவிடப்பட்டவாறு சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளும் பணியை ஒரு மாத

காலத்தினுள் நிறைவு செய்து வழங்கும்படி வனசீவராசிகள் மற்றும் வன வள பாதுகாப்புத் அமைச்சின் செயலாளரது இல. MSD/07/VL/117 (தொகுதி 1) மற்றும் 2023.07.27 ஆந் திகதிய கடிதம் மூலம் சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதனிடையே, சட்ட வரைஞர் திணைக்களத்தின் இல. LDO 54/2019 மற்றும் 2023.07.26 ஆந் திகதிய கடிதம் மூலம் திருத்தப்பட்ட சட்டத்தின் அவதானிப்புக்களை வழங்கும் பொருட்டு வனசீவராசிகள் மற்றும் வன வள பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்பது பற்றி மேலும் அறியத் தருகின்றேன்.